அகத்தியர் துணை
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# ஞானத்திருவடி

ஓங்காரக்குடில் ஆசான் அருளிய சன்மார்க்க உண்மைப் பத்திரிகை
விகாரி ❂ தை (ஜனவரி – 2020) விலை: ரூ.10/–

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

## உள்ளடக்கம்

1. சித்தர்கள் போற்றித் தொகுப்பின் சிறப்பு ........ 5
2. சித்தர்கள் போற்றித் தொகுப்பு ........ 6
3. மகான் திருமூலர் அருளிய ஆசி நூல் ........ 11
4. 27.08.1989 அன்று அருளிய **குருநாதரின் அருளுரை** **யோக ஞானம்** ........ 15
5. தினசரி பாராயணம் – வெள்ளிக்கிழமை ........ 33
6. 85வது அவதார தினவிழா மற்றும் மார்கழி மாத பௌர்ணமி விழா ........ 38
7. தைப்பூசம் மற்றும் பௌர்ணமி விழா ........ 38
8. ஓங்காரக்குடில் வெளியீடுகள் ........ 39
9. ஓங்காரக்குடில் நித்திய செயல்பாடுகள் ........ 49

ஓங்காரக்குடில் ஆசான்

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளிடம்**
**ஆசிபெறும் நேரம்**
**தினசரி மதியம் 3 மணி**

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை, ஓங்காரக்குடில், துறையூர்.

கிட்டவே பிரணவக்குடில் எனும்
குருராஜன் அரங்கன் வாழ் தடம்
திட்டமிட்டு ஆறுமுகனார் அருளி
தருமம் வளர்க்கும் கருமவினை போக்கும்
வினைபோக்கும் ஞான தடமாகும்
விரும்பி உங்கள் தொடர்பு கூட்டி
இணைந்து தரும பங்களிப்புடன்
இயன்ற சேவை செய்து கொண்டு
கொண்டுமே குருவாக அரங்கனை
குவலயத்தார் வணங்கி நின்று
தொண்டுடன் தீட்சை ஏற்று
தொடர்ந்து வந்து குருசேவை ஆற்ற

– மகான் திருமூலர் ஆசிநூல்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்,

**ஞானத்திருவடி நூலே ஞானிகள் திருவடியாகும்.**

ஞானத்திருவடி என்னும் நூல் முற்றுப்பெற்ற மகான்களைப் பற்றி பேசுவதாகும். இந்நூலை வாங்குதல், படித்தல், மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்தல் ஆகிய அனைத்துமே ஜென்மத்தைக் கடைத்தேற்ற உதவும். எனவே இந்நூல் ஞானவாழ்வு விரும்புகிறவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்நூல் வீட்டில் இருந்தால் நவகோடி சித்தர்களும், சித்தர்களுக்கெல்லாம் தலைவராகிய அகத்தீசரும், அவருக்கு ஆசானாகிய சுப்பிரமணியரும் நமது வீட்டில் இருந்து அருள் செய்வதாக எண்ணவேண்டும்.

மேலும் ஓங்காரக்குடில் ஆசான் 44 ஆண்டு காலம் ஓங்காரக்குடிலில் கடுந்தவம் இருந்து வருகிறார்கள். உலக மக்களை கடவுளின் பிள்ளைகளாக பார்த்து, அவர்களுக்கு வரும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் விடுவித்து ஞானியர்களின் திருவடிதான் உண்மை ஆன்மீகம் என்று சொல்லி அவ்வழியில் நம்மை அழைத்துச் செல்லும் ஓங்காரக்குடில் ஆசான் முருகப்பெருமானின் கல்கி அவதாரம் **தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள், ஞானிகளின் பாடல்களில், தான் உணர்ந்த பல இரகசியங்களை நம்பால் கருணைகொண்டு எளிய முறையில் அருளிய அருளுரைகள் அடங்கியதுதான் **ஞானத்திருவடி** நூல்.

விரைவில் எதிர்பாருங்கள் அற்புதமான “**ஞானயுகம்**” அமைகின்றதை!

அன்புடன்
இரா.மாதவன்.

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**பாவபரிகாரமும் சாபவிமோசனமும் பெற்றுத்தரவல்ல அற்புத பாராயண நூல்**

**சித்தர்கள் போற்றித் தொகுப்பு**

ஞானிகள் அத்துணைபேரும் முருகப்பெருமானால் வாசி நடத்திக் கொடுக்கப்பட்டு மும்மலக் குற்றத்தை வேருடன் அறுத்து வெற்றி கண்டவர்கள். அவர்களுக்கு இறப்பும் பிறப்பும் இல்லை. நரை, திரை, மூப்பு இல்லை. சித்தர்கள் அனைவரும் மரணமில்லாப் பெருவாழ்வை பெற்றவர்கள். ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில் செய்யும் வல்லமையை பெற்றவர்கள். இவர்களின் திருவடிகளை பூஜித்தாலே நாம் செய்த பாவங்களெல்லாம் நீங்கிவிடும். பாவங்களுக்கு காரணமான உயிர்க்கொலை செய்தல், புலால் உண்ணுதல், மது அருந்துதல், சூதாடுதல், வரவுக்கு மீறிய செலவு செய்தல் இன்னும்பல தீவினை செயல்களெல்லாம் கீழ்க்கண்ட சித்தர்கள் போற்றித் தொகுப்பை படித்தால் நீங்கிவிடும். பெருமைக்குரிய சித்தர்கள் போற்றித் தொகுப்பை ஒரு தீபம் ஏற்றி வைத்து பயபக்தியுடன் பணிந்து வணங்கி பாராயணம் செய்தால் இல்லறமும் சிறக்கும், வீடுபேறாகிய ஞானமும் கைகூடும்.

கல்வி கற்கும் மாணவர்கள் தினசரி பாராயணம் செய்தால், கல்வியில் சிறந்த தேர்ச்சியை பெறுவதோடு நல்ல வேலை வாய்ப்பும் அமையப் பெறுவார்கள்.

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகின்ற ஆன்மீகவாதிகளுக்கு இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பானது, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள கிடைத்த ஒரு அற்புதமான பாராயண நூலாகும்.

எதை விரும்பி சித்தர்கள் போற்றித் தொகுப்பை பாராயணம் செய்கிறீர்களோ அதை அப்படியே பெற்றுத் தரவல்ல அற்புதமான பாராயண நூல் சித்தர்கள் போற்றித் தொகுப்பாகும். சித்தர்கள் சாதி, மதம், இனம், மொழி, தேசம் கடந்து மனிதகுலத்திற்கு பொதுவானவர்கள். ஆதலினால் சித்தர்கள் போற்றித் தொகுப்பை எல்லா சமயத்தினரும், எல்லா நாட்டினரும், பேதாபேதமின்றி பாராயணம் செய்யலாம். ஆண், பெண், சிறார், பெரியோர், குடும்பஸ்தன், துறவி, பஞ்சபராரிகள், ஏழை எளியோர் என யாவரும் பாராயணம் செய்யலாம். கணவனை இழந்தவர்களும் தடையின்றி விளக்கேற்றி பாராயணம் செய்யலாம். எந்த கட்டுப்பாடும் இல்லை, எந்த சடங்குகளும் இல்லை.

அற்புதம் வாய்ந்த இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை பல கோடி பேர் பாராயணம் செய்து எண்ணற்ற பலன்களை அடைந்ததோடு அவர்களது பிரச்சனைகள் தீர்ந்திடவும், வேண்டுகோள்கள் நிறைவேறி மனம் மகிழ்ந்ததும், இவ்வுலகம் கண்ட அற்புத உண்மையாகும். இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை இன்னும் பலகோடி மக்கள் பாராயணம் செய்து மேன்மை அடைவார்கள் என்பது ஞானிகள் வாக்காகும்.

இதுவரையிலும் ஞானவாழ்வு அடைவதற்கு துணையாக இருந்ததும், இனி அடையப்போகின்றவர்களுக்கும் சித்தர்கள் போற்றித் தொகுப்பு துணையாகும் என்பது சத்திய வாக்காகும்.

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

திருமந்திரம் : திருவடிப்பேறு : 1598

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று
உலகறியச் செய்யும் வள்ளல்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்
**தொகுத்து வழங்கிய**

# சித்தர்கள் போற்றித் தொகுப்பு

| | | | |
|---|---|---|---|
| ஓம் | அகத்தியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அகப்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அசுவினித்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அத்திரி மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அநுமான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அம்பிகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருணகிரிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருள்நந்திசிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அல்லமாபிரபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அழுகண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | 10 |
| ஓம் | இடைக்காடர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமலிங்கசுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | உமாபதி சிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஔவையார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கஞ்சமலைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடைப்பிள்ளைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடுவெளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கண்ணானந்தர் | திருவடிகள் போற்றி | 20 |

| | | |
|---|---|---|
| ஓம் | கண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | கணநாதர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | கணபதிதாசர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | கதம்பமகரிஷி | திருவடிகள் போற்றி |
| ஓம் | கபிலர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | கமலமுனிவர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | கருவூர்தேவர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | கல்லுளிச்சித்தர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | கலைக்கோட்டு முனிவர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | கவுபாலச்சித்தர் | திருவடிகள் போற்றி 30 |
| ஓம் | கணராமர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | காகபுஜண்டர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | காசிபர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | காலாங்கிநாதர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | குகைநமச்சிவாயர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | குதம்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | குமரகுருபரர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | குருதட்சணாமூர்த்தி | திருவடிகள் போற்றி |
| ஓம் | குருராஜர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | குறும்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி 40 |
| ஓம் | கூர்மானந்தர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | கொங்கணேஸ்வரர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | கோரக்கர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | கௌசிகர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | கௌதமர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | சங்கமுனிச் சித்தர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | சங்கர மகரிஷி | திருவடிகள் போற்றி |
| ஓம் | சங்கிலிச்சித்தர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | சச்சிதானந்தர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | சட்டநாதர் | திருவடிகள் போற்றி 50 |
| ஓம் | சண்டிகேசர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | சத்யானந்தர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | சிவயோகமாமுனிவர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | சிவவாக்கியர் | திருவடிகள் போற்றி |
| ஓம் | சிவானந்தர் | திருவடிகள் போற்றி |

ஓம் சுகப்பிரம்மர் திருவடிகள் போற்றி
ஓம் சுந்தரானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சுந்தரமூர்த்தி திருவடிகள் போற்றி
ஓம் சூதமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சூரியானந்தர் திருவடிகள் போற்றி 60
ஓம் சூலமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சேதுமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சொரூபானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் ஜம்பு மகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் ஜமதக்னி திருவடிகள் போற்றி
ஓம் ஜனகர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனந்தனர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனாதனர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனக்குமாரர் திருவடிகள் போற்றி
ஓம் ஜெகநாதர் திருவடிகள் போற்றி 70
ஓம் ஜெயமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் ஞானச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் டமாரானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் தன்வந்திரி திருவடிகள் போற்றி
ஓம் தாயுமான சுவாமிகள் திருவடிகள் போற்றி
ஓம் தானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் திரிகோணச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருஞானசம்பந்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருநாவுக்கரசர் திருவடிகள் போற்றி
ஓம் திருமாளிகைத் தேவர் திருவடிகள் போற்றி 80
ஓம் திருமூலதேவர் திருவடிகள் போற்றி
ஓம் திருவள்ளுவர் திருவடிகள் போற்றி
ஓம் தூர்வாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் தேரையர் திருவடிகள் போற்றி
ஓம் நந்தனார் திருவடிகள் போற்றி
ஓம் நந்தீஸ்வரர் திருவடிகள் போற்றி
ஓம் நாதாந்தச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் நாரதர் திருவடிகள் போற்றி
ஓம் நொண்டிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பட்டினத்தார் திருவடிகள் போற்றி 90

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பத்ரகிரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பதஞ்சலியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரத்துவாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பராசரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பாம்பாட்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிங்களமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிடிநாகீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிருகுமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிரும்மமுனிவர் | திருவடிகள் போற்றி | 100 |
| ஓம் | பீர்முகமது | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புண்ணாக்கீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலத்தீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலிப்பாணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பூனைக்கண்ணார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | போகமகாரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மச்சமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மஸ்தான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மயூரேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாணிக்கவாசகர் | திருவடிகள் போற்றி | 110 |
| ஓம் | மார்க்கண்டேயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாலாங்கன் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மிருகண்டரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | முத்தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மெய்கண்டதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மௌனச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யாகோபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யூகிமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ரோமரிஷி | திருவடிகள் போற்றி | 121 |
| ஓம் | வசிஷ்டமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரதரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வராகிமிகி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வால்மீகி | திருவடிகள் போற்றி | |

ஓம் விசுவாமித்திரர் திருவடிகள் போற்றி
ஓம் வியாக்ரமர் திருவடிகள் போற்றி
ஓம் வியாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் விளையாட்டுச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் வேதாந்தச்சித்தர் திருவடிகள் போற்றி 131
ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள்
திருவடிகள் போற்றி போற்றி.

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம் 3047

மேற்கண்ட 131 சித்தர்கள், மகான்களின் திருவடிகளை தினசரி காலையும் மாலையும் போற்றி பூஜை செய்வதே சிறப்பறிவாகும். சிறப்பறிவு பெற்றவர்களுக்கு குடும்ப ஒற்றுமை, புத்திர பாக்கியம், உடல் ஆரோக்கியம் போன்ற நல்வினைகள் பெருகி, மது அருந்துதல், புலால் உண்ணுதல், சூதாடுதல் போன்ற தீவினைகள் நீங்கிவிடும். மேலும், மாதம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ பசித்த ஏழைகளுக்கு பசியாற்றியும் வந்தால், பாவம் புண்ணியம் பற்றி உணர்ந்து புண்ணியம் பெருகி ஞானியாவார்கள் என்பது சத்தியம்.

## ஓங்காரக்குடில் ஆசான் ஆசி!



ஓங்காரக்குடிலில் நடைபெறும் அன்னதானம் மற்றும் அறப்பணிகளுக்காக, தமிழகமெங்கும் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சார்பாக ஞானத்திருவடி நூலை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அன்பர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல ஞானிகள் அருள் கிட்டி எல்லா நன்மைகளும் அடைவார்கள். மேலும் உடல் ஆரோக்கியமும், நீடிய ஆயுளும், எல்லா நலமும் வளமும் பெறுவார்கள். மேலும் ஞானமும் சித்திக்கும் என்று ஓங்காரக்குடில் ஆசான் ஆசி வழங்கியுள்ளார்கள்.



அன்பான வாசகர்களே வணக்கம்

**உங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா!**

ஞானத்திருவடி நூலை படித்து, உங்கள் உணர்வுகளை எங்களோடு பகிர்ந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

– அன்பன் இரா.மாதவன், 98424 55661.

# விகாரி வருடம் தை மாத ஞானத்திருவடி நூலிற்கு
# மகான் திருமூலர் அருளிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

1. மானுடக்குலமே கலங்கிடாதே
மகத்துவம் உம்முள் நிறைய உண்டு
ஞானிகள் கூடி கலியுகம் தன்னில்
நன்மைகள் புரிந்திட பல சூட்சுமங்கள்

2. சூட்சுமங்கள் நூல்களாய் ஆசியாய்
சுத்தநெறிபட வாழும் வழிக்கு
மாட்சிமை கூட்டி ஆங்காங்கே
மண்ணுலகில் சக்தியாய் வெளிவர

3. வருகின்ற வகையே துறையூர் மண்ணில்
வடிவேலனின் அருள் சூட்சுமமாக
ஆறுமுக அரங்கமகா தேசிகனும்
அற்புதம் நிகழ்த்த அவதரித்து

4. அவதரித்து சன்மார்க்க கொள்கை
அகிலம் ஏற்று தேறிடவும்
புவனம் மாற்றம் செய்து நன்கு
புண்ணிய யுகமாக கலியுகத்தை மாற்றவும்

5. மாற்றும் சக்தியாக தருமசேவை
மண்ணுலகில் விரிவாக செய்துவர
ஆற்றல் கூட்டி ஞானியர் கூட்டம்
அரங்கனுள் கலந்து அருளுகின்றோம்

6. அருளவே அரங்கன் சக்தியாக வரும்
ஆற்றல்மிகு ஞானத்திருவடி நூலுக்கு
அருளுவேன் விகாரி கலை திங்களுக்கான
ஆசிதனை திருமூலர் யானும் உரைப்பேன்

7. உரைக்கவே கலிவாழ் மக்களே
உங்களை அறியும் தெளியும்
மறையாக ஞானத்திருவடி நூல்
மகத்துவம் கூட்டி வருதல் காண

8. காணவே ஞானமாக ஏற்று
கட்டாயம் வாசிப்பு செய்து
ஞானமாக பூஜித்து வருக
ஞானவான்கள் ஆகும் வாய்ப்பு கிட்டும்

9. கிட்டவே பிரணவக்குடில் எனும்
குருராஜன் அரங்கன் வாழ் தடம்
திட்டமிட்டு ஆறுமுகனார் அருளி
தருமம் வளர்க்கும் கருமவினை போக்கும்

10. வினைபோக்கும் ஞான தடமாகும்
விரும்பி உங்கள் தொடர்பு கூட்டி
இணைந்து தரும பங்களிப்புடன்
இயன்ற சேவை செய்து கொண்டு

11. கொண்டுமே குருவாக அரங்கனை
குவலயத்தார் வணங்கி நின்று
தொண்டுடன் தீட்சை ஏற்று
தொடர்ந்து வந்து குருசேவை ஆற்ற

12. ஆற்றவே குருவடி பணிந்து
அகலாத பூரண சரணடைவு
பற்றியே மனபயம் ஐயம் இல்லா
பாரப்பா எங்களை தேற்றும்படி என

13. என வேண்டி தொடர்ந்து வருக
எண்ணம் தூய்மைபடும்படி வேண்டி
தான தருமம் வகை உதவியே
தயவு பெருக்கவும் வேண்டிவர

14. வருகவே குருவரங்கன் தானும்
வருகின்றோர் எண்ணம் அறிந்து
திருவருள் கிட்டும்படி உங்களுக்கு
திடமும் தக்க தெளிவும் பலமும் பெற

15. பெறவே அருளி வரமீந்து
பிசகில்லா காத்து மீட்பரென்பேன்
அறமே வடிவாக வந்த ஞானியை
அணுகவே அணுகவே மக்களுக்கு

16. மக்களுக்கு சர்வபலமும் கூடியே
மரணமும் மறுமையும் வெல்லும்
ஆக்கமும் ஆற்றலும் கூடியே
அகிலமே மாற்றம் காணநேரும்

17. நேருமைபட மக்களின் மனநிலை
நீதி நிர்வாக வகை தருமமும்
வருமுலகில் குருவருள் பெறவே
வல்லமைபட மாற்றமாக கண்டு

18. கண்டுமே கலியுகம் தானுமே
கந்தவேலன் ஆளுமை கொண்ட
கண்டிடும் ஞானயுகம் ஆகவே
கண்டுவாரீர் அரங்க ஞானியை நோக்கி திருமூலர் என் ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

விகாரி ஆண்டு தை மாதத்திற்கான ஞானத்திருவடி நூலிற்கு மகான் திருமூலர் அருளிய ஆசி நூலின் சாரம் :

மனித குலமே கலங்கிடாதே உம்முள் மகத்துவங்கள் நிறைய உண்டப்பா, கலியுகத்தின் துன்பங்களில் இருந்து மனிதகுலத்தினை காத்திட வேண்டியே முற்றுப்பெற்ற ஞானிகள் எல்லாம் ஒன்றுகூடி பலவிதமான நற்செயல்களை செய்து வருகின்றார்கள். அவர்களது பலவிதமான சூட்சுமங்கள் எல்லாம் நூல்களாய் ஆசியாய் வெளிவந்து உலகமக்களை தூயநெறியினில் வாழ்ந்திட செய்ய வலியுறுத்தி உலகமெங்கும் ஆங்காங்கே சக்திகளாய் வெளிவந்து கொண்டிருக்கிறது, அதன் வகையாலே ஞானபூமியாம் துறையூர் மண்ணிலே முருகப்பெருமானின் அருட்சூட்சுமமாக அவதாரமாக ஆறுமுக அரங்கமகா தேசிகனாரும் உலகினில் அற்புதங்களை நிகழ்த்திடவே அவதரித்து உலக மக்களெல்லாம் சன்மார்க்க கொள்கையினை ஏற்றுக் கடைத்தேறிடவும் உலகமாற்றம் செய்து இவ்வுலகை புண்ணிய லோகமாக மாற்றிடவும் அவ்விதம் உலகப் பெருமாற்றத்தை செய்திடவே மகா சக்தியாக தருமத்தின் சக்தியையே பயன்படுத்திட தரும சேவைகளை உலகினில் எல்லா திசைகளிலும் விரிவாகச் செய்து உலகமெங்கும் தரும சக்தியினை அதிகப்படுத்தி வருகின்றோம். ஞானியர் கூட்டம் நாங்களும் அரங்கனுள் கலந்து ஆற்றல் பெருக்கி அருள் செய்து வருகின்றோம்.

அந்த வகையினிலே ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சக்தி வடிவமாக வெளிவருகின்ற ஞானத்திருவடி நூலிற்கு விகாரி வருடம் தை மாதத்திற்கான ஆசி நூல்தனையே திருமூலர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருமூலர்.

கலியுக மக்களே உங்களை நீங்களே அறிந்து கொள்ளவும், அறிந்து தெளிந்து கொள்ளவும் உண்டான வேதநூலாக ஞானத்திருவடி நூலானது மகத்துவங்களை அதிகமாகக் கொண்டு வெளிவருகின்றது. ஆதலினால்

ஞானத்திருவடி நூலினை ஞானம் அளிக்கும் ஞான நூலாக ஏற்று கட்டாயம் அவரவரும் வாங்கி படிப்பதுடன் ஞானத்திருவடி நூலினை ஞானமளிக்கும் நூலாய் பூஜையில் வைத்து பூஜைகள் செய்துவர, அவரவரும் ஞானவான்கள் ஆகும் வாய்ப்பினை பெறுவார்கள்.

ஆறுமுக அரங்கமகான் வாழும் ஞானபீடமாகிய ஏழாம்படைவீடு துறையூர் ஓங்காரக்குடில் முருகப்பெருமானால் சர்வ வல்லமையுடன் படைக்கப்பட்ட ஞானவீடாகும். முருகப்பெருமானால் அருள் செய்யப்பட்டு அளவிலாது தர்மம் வளர்க்கும் தருமசாலையாகும். மக்களின் வினைகளை போக்கும் ஞானபீடமாகும். மக்கள் எல்லாம் மனம் விரும்பி அரங்கரின் ஓங்காரக்குடிலை அணுகி ஓங்காரக்குடிலுடன் இணைந்து தருமப்பணிகளை தாராளமாய் செய்து வருவதோடு தருமம் வளர பொருளுதவிகளைச் செய்தும் தொண்டுகளைச் செய்தும் வர வேண்டும்.

ஞானகுரு ஆறுமுக அரங்கமகா தேசிகனார் தம்மை நாடி வருகின்ற அன்பர்களின் எண்ணங்களை அறிந்து அவர்களுக்கு திருவருள் கிடைத்திடும்படியாக மனோதிடமும் தக்க தெளிவையும் தந்து அவர்களுக்கு அருள்செய்து வரங்களை அளித்து காப்பாற்றி மீட்பார்.

அறமே வடிவமாகக் கொண்டு அவதரித்திட்ட மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை மக்கள் அணுகி தொடர்ந்து வர, வருகின்றவர்களுக்கு சர்வபலம் கிடைக்கும், மரணத்தையும் வெல்லுகின்ற ஆற்றலும், மறுபிறப்பை வெல்லும் ஆற்றலும் பெருகி இந்த பேருலகமே மாற்றம் அடையும்.

உலக மக்களின் மனோநிலை மாறி நீதித்துறையும் நிர்வாகத்துறையும் தருமத்தின் வழியில் குருவருள் பெற்றிட செல்லும், குருவருள் துணையினால் நாட்டின் நிலைமைகள் எல்லாம் வல்லமைபெற்று நல்ல மாற்றங்கள் நாடெங்கும் உருவாகி கலியுகமும் முருகப்பெருமானின் ஆட்சியை கொண்ட ஞானயுகமாக ஆகிடும்.

ஆதலினாலே உலகமக்களே ஞானயுகம் உலகினில் படைத்திட வேண்டியே வாரீர் வாரீர் ஆறுமுக அரங்கமகானை நோக்கி என தமது ஞானத்திருவடி ஆசி நூல் மூலம் உலகமக்களுக்கு அழைப்பு விடுக்கிறார் மகான் திருமூலர்.

–சுபம்–

# முருகன் திருவடி வாழ்க

திருவிளக்கு பூஜை உங்கள் பகுதியில் செய்ய தொடர்புக்கு

**R.சுரேஷ்** – 94434 21935

திருச்சி மாவட்டம், துறையூர், ஓங்காரக்குடிலாசான்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தில்
27.08.1989 அன்று அருளிய

# யோக ஞானம்

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

அன்புள்ள சன்மார்க்க சங்க அன்பர்களே தொண்டர்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

மகான் திருவள்ளுவர் அருளிய திருக்குறளில் பொறையுடைமை என்ற அதிகாரம் உள்ளது. பொறையுடைமை என்றால் பொறுத்துக் கொள்ளுதல் என்பதாகும். இது சின்ன விஷயமல்ல. ஒரு லட்சியத்தை அடையும் வரையில், அந்த லட்சியத்தை அடையக்கூடிய காலம் வரும்வரையில், அதற்காக பொறுத்துக் கொள்ள வேண்டும்.

யோகிகள் ஒரு குறிப்பிட்ட காலம் வரும்வரையில், ஒரு நடைமுறை பழக்க வழக்கத்தை கடைப்பிடிப்பார்கள், அந்தக் காலம் வரை குறிப்பிட்ட உணவையே உண்பார்கள். அந்த லட்சியத்தை அடையும் வரையில் பொறுத்திருப்பார்கள். ஒரு துறையில் ஒருவன் முன்னேற வேண்டுமென்று ஆசைப்பட்டால், அந்தத் துறையில் தக்க காலம் வரும் வரையில் காத்திருப்பது ஒருவகையான பொறுமை. இதுபோன்று பல கருத்துகள் சொல்லலாம்.

**கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிப்**
**பால்கொண்டு சோமன் முகம்பற்றி உண்ணாதோர்**
**மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை**
**மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே.**

**– திருமந்திரம் – இராசதோடம் – கவி எண் 246.**

கால் கொண்டு கட்டுதல் என்பது சின்ன விஷயமல்ல. சுவாசத்தை இரேசித்து பூரித்து கும்பித்து புருவமத்தியில் செலுத்தி சுவாசத்தை கட்டி ஆண்டு பன்னிரண்டு வரையில் பொறுமையாக இருக்க வேண்டும்.

**கடைவாச லைக்கட்டிக் காலை எழுப்பி**
**இடைவாசல் நோக்கி இனிதுள் இருத்தி**
**மடைவாயிற் கொக்குப்போல் வந்தித் திருப்பார்க்**
**குடையாமல் ஊழி இருக்கலு மாமே.**

**– திருமந்திரம் – தாரணை – கவி எண் 591.**

இது ஒரு மறைபொருள்.

**கடைவாச லைக்கட்டிக் காலை எழுப்பி**
**இடைவாசல் நோக்கி இனிதுள் இருத்தி**

**கடைவாசலைக் கட்டி** – சிரசு என்பது தலைவாசல். இங்கிருக்கின்ற மூச்சுக்காற்றை நிறுத்தி கட்டி எழுப்ப வேண்டும் என்பார். **கடைவாச லைக்கட்டிக் காலை எழுப்பி** – கால் என்கிற மூச்சுக்காற்றை எழுப்ப வேண்டுமென்பார்.

**இடைவாசல் நோக்கி இனிதுள் இருத்தி** – கண்டஸ்தானத்தில் காற்றை நிறுத்தி, இரேசித்து, பூரித்து, கும்பித்து கனலை எழுப்பி அமிழ்தபானம் சாப்பிடுவான். இது சொல்லுவதற்கு இலகுவாக இருக்கும். இதில் ஒரு கணக்கு இருக்கிறது. இதற்கு ஆண்டு பன்னிரண்டு வரை பொறுத்திருக்க வேண்டும்.

இப்படி ஒவ்வொன்றும் ஞானத்திற்காக பேசப்பட்டது. பன்னிரண்டு ஆண்டுகள் உப்பில்லாமல் சாப்பிட்டு பொறுமையாக இருக்க வேண்டும். இது மிகமிக கடினமான ஒன்று. ஆனால் பொறுத்துக் கொள்ள வேண்டும். எழுகின்ற உணர்வை அடக்கிக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் அடையக்கூடிய இலட்சியத்திற்கு தடையாக இருக்கும்.

**உடையாமல் ஊழி இருக்கலு மாமே** – உடையாமல் ஊழி இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டால் பொறுமையாக இருக்க வேண்டும். கடைவாசலைக் கட்டினாய் உண்மையே, காலை எழுப்பக் கூடிய முறையையும் அறிந்தாய் உண்மையே. இடைவாசல் என்று சொல்லப்பட்ட கண்டஸ்தானத்தில் நிறுத்தினாய் உண்மையே. **இனிதுள் இருத்தி** – இருத்தினால் மட்டும் போதாது.

**மடைவாயிற் கொக்குப்போல் வந்தித் திருப்பார்க்கு** – சிறு மீன் போய் பெரிய மீன் வரும்வரை கொக்கு அமைதியாக இருக்கும். அப்படியே அசையாமல் இருக்கும். இந்த இடத்தில் கொக்கை ஏன் உவமை காட்டினார் என்றால், தனக்கு தேவையான மீன் எது என்பதை அறிந்து, அது கிடைக்கும் வரை அமைதியாக இருக்கும். தனக்கு தேவையான இரை கிடைத்தவுடன் விரைவாக பிடித்துவிடும்.

**கொக்குஒக்க கூம்பும் பருவத்து; மற்றுஅதன்**
**குத்துஒக்க சீர்த்த இடத்து.**

**– திருக்குறள் – காலம் அறிதல் – குறள் எண் 490.**

இவர் யோகத்திற்கு பயன்படுத்தக்கூடிய அதே கருத்தை உலக மக்களுக்கும் மகான் திருவள்ளுவர் பயன்படுத்துவார். இவரும் யோகி, அவரும் யோகிதான்.

**கொக்குஒக்க கூம்பும் பருவத்து; மற்றுஅதன்**
**குத்துஒக்க சீர்த்த இடத்து.**

**– திருக்குறள் – காலம் அறிதல் – குறள் எண் 490.**

என்று மகான் திருவள்ளுவர் சொன்ன உவமையை, ஆசான் திருமூலதேவர், **மடைவாயிற் கொக்குப்போல் வந்தித் திருப்பார்க்கு** என்று சொன்னார். ஆகவே பூஜையும் செய்ய வேண்டும், பொறுமையோடு காத்திருக்கவும் வேண்டும். எடுத்துக் கொண்ட லட்சியத்தை அடையும் வரையில் பொறுமையாக காத்திருக்க வேண்டும்.

இங்கே,

**மடைவாயிற் கொக்குப்போல் வந்தித் திருப்பார்க்**
**குடையாமல் ஊழி இருக்கலு மாமே** என்று சொல்வார்.

ஞானவாழ்க்கையை மேற்கொள்ளுகின்ற மக்கள் அந்த அளவிற்கு பொறுமையாக இருக்க வேண்டும். **வந்தித் திருப்பார்க்கு –** சலிப்பில்லாமல் சோர்வில்லாமல் தினம்தினம் பூஜை செய்கின்ற மக்கள், காலத்தை எதிர்பார்த்து இருந்தால்தான் **உடையாமல் ஊழி இருக்கலுமாமே** என்கிறார். அவன் மரணமில்லாப் பெருவாழ்வை வாழலாம் என்று சொல்வார்.

**உடையாமல் ஊழி இருக்கலு மாமே –** பல கோடி ஆண்டுகள் வாழலாம்.

**இருந்தேன்இக் காயத்தே எண்ணிலி கோடி**
**இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே**
**இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே**
**இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே.**

**– திருமந்திரம் – திருமூலர் வரலாறு – கவி எண் 80.**

பல கோடி ஆண்டுகள் ஒருவன் வாழ வேண்டுமென்று ஆசைப்பட்டால், அவன் பொறுமையாக பூஜை செய்ய வேண்டும். உலக நடையை மட்டும் தெரிந்து கொண்டால் மட்டும் போதாது, உலக நடையோடு சேர்ந்து ஞானவாழ்க்கையைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். இதற்குரிய பொறுமை உங்களுக்கு இருக்க வேண்டும். சிறிது காலம் பூஜை செய்துவிட்டு, அளவிலாத பூஜை செய்ததாக எண்ணி ஒருவகையான சோர்வு அடைந்தால் எடுத்துக் கொண்ட இலட்சியம் தடைபடும்.

பொறுமை என்பதற்கு பலவகையான பொருள் உண்டு. இந்த உலகம் தோன்றியதிலிருந்து இதுவரையிலும் ஏழைகள்தான் பொறுமையோடு இருப்பார்கள். வேறு வழியில்லை. என்ன செய்வது? அந்தக் காலத்தில் நிலப்பரப்பு அதிகமாக வைத்திருக்கும் பெருநிலக்கிழார்கள் இருந்தார்கள். இந்தக் காலத்தில் முதலாளிகள் அதிகாரிகள் அவர்களை போன்று இருக்கிறார்கள். அவர்களை மூன்று வகையாக பிரிக்கலாம்.

கடையிலே ஒருவன் வேலைக்கு இருப்பான். முதலாளி என்று சொல்லப்பட்ட மூலதனம் உள்ளவன், வேலை செய்பவனை கடுமையாக பேசுவான். இப்படி கடுமையாக பேசும்போது, முதலாளிக்கு எதிராக பேச வேண்டுமென்ற உணர்வு உள்ளத்தில் எழும். அப்படி பேசிவிட்டால், மனைவி பிள்ளைக்குட்டிகளின் நிலை என்ன என்று எண்ணி உள்ளுக்குள்ளேயே வருந்துவான். இப்படி ஒவ்வொரு நாளும் எண்ணி எண்ணி வருந்துவான். அவனுடைய முதலாளியின் தாக்குதல் பேச்சைக் கேட்டும், அவன் பொறுமையாக இருப்பதற்கு காரணம் அவனுடைய வறுமையாகும். அவன் ஏழையாக இருப்பதால், அவனுக்கு நீ எந்த அறிவுரையும் சொல்ல வேண்டியதில்லை. அவனுடைய வறுமையே அவனுக்கு பொறுமையை தரும்.

மாத வருவாயை கொண்டு குடும்பத்தை நடத்த வேண்டுமென்ற சூழ்நிலையில் இருப்பவன், தானாகவே பொறுமைக்கு உட்படுகிறான். அவனுக்கு பொறுமையாக இருக்க யாரும் சொல்லித்தர தேவையில்லை. அவனுக்கு எந்த சாஸ்திரமும் தெரியாது. பொறுமையாக இருந்தால்தான் வாழ முடியும் என்பதே அவனுக்கு தெரிந்த ஒரே சாஸ்திரம்.

அதேபோன்று அதிகாரிகள் தனக்கு கீழே உள்ள ஊழியர்களை கடுமையாக பேசுவான். அப்படி பேசியதை பொறுக்காமல் கீழ்பணிபுரிபவன் எதிர்த்து பேசினால் அந்த அதிகாரியால் பிரச்சனை வரும்.

பொறுமையை கடைப்பிடிக்க வேண்டுமென்று அந்த அதிகாரிக்கு கீழ் பணியாற்றும் ஊழியர்களுக்கு சொல்வதா அல்லது அதிகாரிகளுக்கு சொல்வதா என்று கேட்டான். ஊழியன் சிறு தவறு செய்தாலும், கடுமையாக தண்டிக்கும்போது, அந்த ஊழியன் தன்னை அறியாமலேயே மனம் சோர்வடைகிறான். அதை புரிந்து அந்த குற்றத்தை மன்னிக்கக் கூடிய மனப்பான்மை அந்த அதிகாரிகளுக்கு வேண்டும்.

விவசாயி காலை ஐந்து மணியிலிருந்து இரவு ஏழு மணி வரை உழைப்பான். வேலை வாங்கும் அந்த நிலபிரபு, விவசாயி உழைப்பை வாங்கி கொண்டு அவனுக்கு சரியான ஊதியத்தை தரமாட்டான். மாலையில் நெல்லோ, கம்போ, கேழ்வரகோ தானியம் தருகின்றேன் என்று வேலைக்கு அழைப்பான். ஆனால் வேலை முடிந்ததும் தரமாட்டான். நாளைக்கு வா என்று சொல்வான். அந்த நிலபிரபுவை எதிர்த்து பேச முடியாது. அவனை எதிர்த்து பேச முடியாமல் மறுநாள் காலைவரை உணவில்லாமல் பட்டினி கிடப்பான். அவனுக்கு வேறு வழியில்லை. அவனுடைய வறுமைதான் அந்த பொறுமையை அவனுக்கு சொல்லிக் கொடுத்தது.

ஆசான் பேசாது மௌனமாக இருக்கிறார். எதுவுமே பேசவில்லை. என்ன சொல்வார் ஆசான், என்ன சொல்வார் ஆசான் என்று சீடன் ஏங்கிக்

கொண்டிருப்பான். ஒரு நாள் இவனுடைய தன்மையை ஆசான் சோதித்துப் பார்ப்பார். கடுமையாக பேசினால் எப்படி இருக்கிறான்? அல்லது வேறு ஏதும் பேசாதிருந்தால் எப்படி இருக்கிறான்? இப்படியெல்லாம் இவனுடைய குணத்தை பலவாறாக சோதித்துப் பார்ப்பார்.

இவனுடைய தன்மை நமக்கு நிழல் போன்று இருக்கின்றானா? அல்லது காரியத்தை சாதித்தபின் நம்மை இடருவானா? நீயென்ன ஆசான் நானே ஆசான் என்று சொல்வானா? என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்து முடிவெடுக்க பன்னிரண்டு வருடம் ஆகும். அதுவரையிலும் அவன் பொறுத்திருக்க வேண்டும். இல்லையென்றால் அவன் எந்த ஆசானிடம் பயிற்சி பெற்றானோ, அது முற்றுப்பெறுவதற்குள் அவன் தோல்வி அடைவான். ஆகவே பொறுமை என்பது ஒரு இலட்சியத்தை அடையும் வரையில் அடக்கத்தோடு இருப்பதாகும். அதற்குரிய காலத்தை எதிர்பார்த்து இருப்பது போன்றதாகும்.

ஆகவே பொறுமை உள்ளவர் என்ன செய்தாராம்? ஒரு இளைஞனை அழைத்து பொறுமையாக இரு என்றார்.

என்ன சொல்றீங்க ஐயா என்றான். பொறுமையாக இருக்க வேண்டும் என்றார்.

என்ன சொல்றீங்க ஐயா என்றான். பொறுமையாக இருக்க வேண்டும் என்றார்.

என்ன சொல்றீங்க ஐயா என்றான். பொறுமையாக இருக்க வேண்டும் என்றார்.

இப்படி என்ன சொல்றீங்க ஐயா என்ன சொல்றீங்க ஐயா என்று கேட்டுக் கொண்டே இருக்கிறான். மறுபடியும் இவர் பொறுமையாக இருக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்.

ஆனால் இவன் மறுபடியும் மறுபடியும் கேட்டுக்கொண்டே இருந்தான். ஆனால் அவரோ கோபமாக, பொறுமையாக இருக்க வேண்டுமென்று சத்தமாக சொன்னார். ஆகவே அடிப்படை பொறுமைக்கும் ஒரு அளவுதான் உண்டு. பொறுமை கடலினும் பெரிது என்று சொன்னார். கடலினும் பெரிது என்று சொன்னாலும் ஒரு அளவிற்குதான் இருக்க முடியும். மிகுதியாக போகும்போது என்ன செய்ய முடியும்? பொறுமையை இழந்துவிடுவார்கள்.

**குணமென்னும் குன்றுஏறி நின்றார் வெகுளி**
**கணமேயும் காத்தல் அரிது.**

**– திருக்குறள் – நீத்தார் பெருமை – குறள் எண் 29.**

எல்லோருக்கும் கோபம் வரத்தான் செய்யும். அந்தக் கோபம், பலிக்கக் கூடிய இடத்திலே காப்பாற்றிக் கொள்வதுதான் பொறுமையின்

இலக்கணம். ஆகவே இதுபோன்ற எல்லா கருத்துகளையும் ஆராய்ந்து பார்க்கும்போது, ஒருவனுக்கு எப்பொழுது பொறுமை வரும்? என்று கேட்டார். தான் விரும்புகின்றதெல்லாம் கைகூடும்போது, அவன் பொறுமைக்கு வந்துவிடுகிறான். வாழ்க்கையில் தொட்டதெல்லாம் தடைபட்டு, பெரும் புயல் அடித்தால் எங்கே பொறுமை இருக்கும்?

முன் ஜென்மத்தில் ஒருவன் செய்த கொடும்பாவம், வறுமையும், பிணியும், பகையும் போன்ற பல்வேறு பிரச்சனைகளாக அவனை சூழ்ந்துகொண்டு புயலடிப்பது போன்று தாக்கும். அவன் தாக்குப்பிடிக்க முடியாமல் தட்டுத்தடுமாறுவான். அவனுக்கு பொறுமை வேண்டுமென்றால், அவன் திறமையாக, உறுதியாக நின்று ஆசானை தினமும் பூஜை செய்ய வேண்டும். வாழ்க்கையில் ஏற்படுகின்ற பிரச்சனைகளை ஆசான் தீர்த்து வைத்தாலன்றி அவனால் பொறுமையாக இருக்க முடியாது.

தொட்டதெல்லாம் தடைபட்டால் என்ன செய்வான்? யார் இவனுக்கு பொறுமையை தருவது? பொறுமையாக இருக்க முடியுமா? விரும்புகின்ற ஒன்று பூரணமாக சித்தி பெறும்வரையில் இவனுக்கு அந்த வார்த்தை பயன்படாது. ஆனால் சில சந்தர்ப்பத்தில் பயன்படும்.

பொறுமையாக இருக்க வேண்டுமென்று சொல்லலாம், அதை நடைமுறைப்படுத்துவதுதான் பிரச்சனை. அதையும் மகான் திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

**சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியஆம்**
**சொல்லிய வண்ணம் செயல்.**

**– திருக்குறள் – வினைத்திட்பம் – குறள் எண் 664.**

இதை நடைமுறைப்படுத்துவது சின்ன விஷயமல்ல. வாழ்க்கையில் விரும்புகின்ற அத்தனையும் கைகூடும் வரையில், தினமும் பூஜை செய்து ஆசி பெற வேண்டும். யார் நிம்மதியாக பொறுமையாக இருக்கிறான் என்றால், ஒன்று அவன் தவம் செய்திருக்க வேண்டும் அல்லது தர்மம் செய்திருக்க வேண்டும். இந்த இரண்டுமே துணை இருக்குமேயானால், அவனுடைய வாழ்வில் விரும்புகின்றதெல்லாம் கைகூடும், அமைதியாக பொறுமையாக இருக்கலாம். ஒரு சிலருக்கு இரண்டில் ஒன்று செய்ய வாய்ப்பிருக்கும், ஒன்று செய்ய முடியாது. வசதியுள்ள மக்கள் தர்மம் செய்து, ஆன்ம லாபத்தை பெற்றுக் கொள்ளலாம்.

வசதியுள்ள வசதியில்லாத இருசாராரும் சேர்ந்து, நான் பொறுமையோடும் அமைதியாகவும் இருக்க ஆசைப்படுகின்றேன். நான் ஒவ்வொருவரிடமும் அன்பாகவும் நடந்துகொள்ள ஆசைப்படுகின்றேன். அதற்கு உன் தயவு வேண்டுமென்று ஆசான் அகத்தீசரை பூஜை செய்து கேட்க வேண்டும்.

எனக்கு அடிக்கடி சினம் வருகிறது, பல்வேறு பிரச்சனைகளில் தட்டுத்தடுமாறுகின்ற எனக்கு எதைப் பார்த்தாலும் வெறுப்பாக இருக்கிறது. நான் அமைதியாக வாழ நீ அருள் செய்ய வேண்டுமென்று ஆசான் அகத்தீசரை பூஜை செய்து கேட்க வேண்டும். ஆசான் தயவில்லாமல் பொறுமையை கடைப்பிடிக்க முடியாது. சிறந்த, உயர்ந்த குடிமக்கள் யாராக இருந்தாலும் சரி, பிரச்சனை வரும்போது தட்டுத் தடுமாறுவார்கள். அந்த சமயத்தில் ஆசானை பூஜை செய்து பொறுமையை தேடிக் கொள்ள வேண்டும்.

ஒருபக்கம் குழந்தைகளுக்கு நோய், ஒருபக்கம் பிரச்சனைகள், ஒருபக்கம் பகை, செய்யும் தொழில்களெல்லாம் தடைபடுகிறது, வறுமையும் பிணியும் சூழ்ந்து தட்டுத்தடுமாறுகின்றேனே எனக்கு வழியில்லையா என்று கேட்கும்போது, அஞ்சேல் மகனே என்று ஆசான் சொல்வார். அப்பொழுதல்லவா பொறுமை வரும். அஞ்சேல் மகனே என்று ஆசான் அகத்தீசர் சொல்ல வேண்டும். இல்லையென்றால் பொறுமையை இவன் கடைப்பிடிக்க முடியாது.

ஞானிகளை பூஜை செய்தால்தான், ஒருவன் பொறுமையை கடைப்பிடிக்க முடியும். சில நேரங்களில் சிறந்த பயிற்சியாலும் பொறுமையை கடைப்பிடிக்க முடியும். இப்படி இரண்டு வகை உண்டு. பிரச்சனை மேல் பிரச்சனை வரும்போதெல்லாம் தடுமாறும் போதெல்லாம் யாரோ ஒரு மகான் அல்லது உயர்ந்த ஆசான் அல்லது நமக்கு வேண்டிய நண்பர்கள் உற்றத்துணையாக இருந்தால் நமக்கு அமைதி ஏற்படும். அதன் காரணமாக பொறுமையாக இருக்கலாம்.

நமக்கு ஏற்படுகின்ற பிரச்சனைகளெல்லாம், தலைவன் ஆசான் அகத்தீசர், ஆசான் திருமூலதேவர், மகான் கருவூர்முனிவர், மகான் இராமலிங்கசுவாமிகள், மகான் மாணிக்கவாசகர், மகான் தாயுமானசுவாமிகள் போன்ற பெரியபெரிய மகான்களிடம் சொல்லி நமது வாழ்க்கையை செம்மைப்படுத்திக் கொண்டால்தான் அமைதி காக்க முடியும்.

ஆசான் திருவள்ளுவர் பொறுமையைப் பற்றி சொல்லும்போது, எந்த ஜீவராசியையும் சுட்டிக் காட்டவில்லை. ஊர்வன, கிடப்பன, நடப்பன, பறப்பன, நீர்வாழ் என எந்த ஜீவராசிகளையும் சுட்டிக் காட்டவில்லை. தொட்டாற்சிணுங்கி என்ற ஒரு செடி உண்டு. அதை தொட்டவுடனேயே அதன் இலைகள் குவிந்து மூடிக் கொள்ளும். சிறியாநங்கை என்ற ஒரு செடி உண்டு. அதன் அருகில் ஆள் போனாலோ அல்லது ஜீவராசிகள் போனாலோ அது சீறும்.

வனங்களில் சில பகுதிகளில் சிலவகையான கொடிகள் இருக்கும். ஏதேனும் உயிரினங்கள் அருகில் வந்தால் அப்படியே சுற்றிக் கொள்ளும். ஆகவே ஓரறிவு உள்ள உயிரினங்களையும், தொட்டால் உணர்ச்சியைக் காட்டக் கூடிய தாவரங்களையும் சுட்டிக் காட்டாமல், மண்ணை சுட்டிக் காட்டியிருக்கிறார். அது

ஜடப்பொருள். இவனை மரம்போன்றோ, அது ஒரு மான் போன்றோ, அது ஆமை போன்றோ சுட்டிக்காட்டாமல் மண்ணைப் போல் என்று சுட்டிக் காட்டுகிறார். மண்ணுக்கு உணர்வு இருக்காது. ஆறறிவு உள்ள மனிதன் உணர்வற்ற ஒரு ஜடப்பொருளாக மாற வேண்டுமென்பது சின்ன விஷயமல்ல.

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.**

**– திருக்குறள் – பொறை உடைமை – குறள் எண் 151.**

ஆசான் திருவள்ளுவர் இங்கே நிலத்தை சுட்டிக்காட்டுகிறார். எந்த உயிரையும் சுட்டிக் காட்டவில்லை. எந்த உயிரும், தனக்கு இடையூறு வரும்போது சீறும், பொறுமையை இழந்துவிடும். எறும்பாக இருந்தாலும் சரி, அதைக் கூட தீண்டினால் கோபம் வரும். மரத்துக்கும் கோபம் வரும். எல்லா ஜீவராசிகளுக்கும் இடையூறு வரும்போது கோபம் வரும். பாம்பை தீண்டினால் சீறும். மாட்டின் அருகில் போகும்போது சீறும்.

ஆனால் ஆசான் திருவள்ளுவர் இவைகளையெல்லாம் சுட்டிக்காட்டாமல் மண்ணை ஏன் சுட்டிக் காட்டுகின்றார் என்றால், ஒருவன் உணர்வற்ற தன்மையை விரும்ப வேண்டும் என்பதற்காகத்தான். இந்த மண்ணை அடித்தாலும் சரி, குத்தினாலும் சரி, வெட்டினாலும் சரி அப்படியே அசையாமல் இருக்கும். தன்னை வெட்டுகின்றவனை மண் தாங்கும். அதுபோல துன்பம் வரும்போது பேசாதிருக்க வேண்டும். ஏன் பேசாதிருக்கிறான் என்றால் உணர்வற்ற நிலைக்கு வந்துவிட்டான். இது சின்ன விஷயமா.

மரம் நிழல் கொடுக்கும். வீட்டு வாசலில் மிகுதியாக மரம் வளர்ந்ததால் அதனுடைய வேர் சுவற்றில் சாரும். அதனால் சுவரில் இடைவெளி விழுந்து, சுவர் விழுந்துவிடுமென்று மரத்தை வெட்டுவான். கடைசி வரையிலும் வெட்டுகின்ற வரைக்கும் அவனுக்கு நிழல் தரும். ஒரு கிளையை வெட்ட துவங்கும்போது, முக்கால்பங்கு நிழல் தரும். மறுபடியும் கிளையை வெட்டும்போது இன்னும் கொஞ்சம் நிழல் தரும். இப்படி கடைசிவரையிலும் மரம் நிழல் தந்துவிட்டு போகும். ஆனால் அதை சொல்லாமல் மண்ணை ஏன் சொல்கிறார் என்றால், அந்த அளவிற்கு இவன் தன்னுடைய நிலையையே மாற்றிக் கொள்ள வேண்டும். மண்ணைப் போல் இவன் உணர்வற்றவனாக ஆக வேண்டும்.

ஆறறிவு உள்ள மனிதனைப் பார்த்து மண்ணைப் போல் இருக்க வேண்டுமென்று சொல்கிறார் என்றால், அவருடைய ஆற்றல் என்ன? அந்தளவிற்கு உன்னை பக்குவப்படுத்த வேண்டுமென்கிறார். அந்தளவிற்கு நீ பக்குவப்பட வேண்டும். யோகிகள் இப்படித்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் யோகிகளை பகைவனும் ஒன்றும் செய்ய முடியாது, வறுமையும் ஒன்றும் செய்ய முடியாது. மெய், வாய், கண், மூக்கு செவி என்று சொல்லப்பட்ட

ஐம்புலன்களும், பஞ்சபூதங்களும் ஒன்றும் செய்ய முடியாது. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்று சொல்லப்பட்ட கரணங்களும் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே பதினான்கு கருவிகளும் ஒன்றும் செய்ய முடியாது.

வறுமையோ, பிணியோ யோகியை இடர முடியாது. அவன் நிலை உயர்ந்து விட்டான். ஆகவே அவனுக்கு கதிரவனாலோ, காற்றாலோ, பூகம்பத்தாலோ மேலும் கொலைக்கருவிகளாலோ மற்றும் வேறு எந்த வகையிலும் இடையூறு வராது. ஆகவே அவன் பொறுமையாக இருக்க வேண்டும்.

அந்த நிலையை நீ அடைய வேண்டுமென்று விரும்பினால், மண்ணைப் போல் பொறுமை காத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக் கொண்ட இலட்சியத்தை அடையும் வரையில் நீ அப்படியிருக்க வேண்டுமென்கிறார் ஆசான் திருவள்ளுவர். இது இல்லறத்தானுக்கும் பொருந்தும், துறவறத்தானுக்கும் பொருந்தும். மகான் திருவள்ளுவர் அரசியல்வாதிக்கும் சொல்கிறார்.

**நெடும்புனலுள் வெல்லும் முதலை; அடும்புனலின்**
**நீங்கின் அதனைப் பிற.**

**– திருக்குறள் – இடன் அறிதல் – குறள் எண் 495.**

அரசனாக இருந்தாலும் சரி, யோகியாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி அவனுக்கு பொறுமை இருந்தாலன்றி எந்த காரியத்தையும் சாதிக்க முடியாது. நேரம் வரும் வரையில் பொறுமையோடு இருக்க வேண்டுமென்று சொல்கிறார். இன்னொரு இடத்தில் சொல்லும்போது,

**ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்**
**தாக்கற்குப் பேரும் தகைத்து.**

**– திருக்குறள் – காலம் அறிதல் – குறள் எண் 486.**

**ஊக்கம் உடையான் ஒடுக்கம்** – எதையும் செய்யக் கூடிய ஆற்றல் உள்ளவன் அடங்கியிருந்தான். ஆட்டுக்கிடா பின்புறம் போகும், அதைப் பார்த்த மற்ற உயிர்கள் ஆட்டுக்கிடா பயந்து செல்கிறது என்று எண்ணும். ஆனால் விரைவாக வந்து தாக்குவதற்காகத்தான் பின்புறம் ஆட்டுக்கிடா செல்கிறது என்பது அதன் இனத்திற்குதான் தெரியும்.

**ஊக்கம் உடையான் ஒடுக்கம்** – ஒடுக்கமாக இருப்பது, தன்னை பலப்படுத்திக் கொண்டு விரைவாக தாக்குவதற்கு என்று சொல்வார். இப்படி பொறுமையைப் பற்றி சொல்வார். காலசந்தர்ப்பம் ஒத்துழைத்தால் அன்றி பொறுமையை கடைப்பிடிக்க முடியாது.

மகான் திருவள்ளுவர் ஜடப்பொருளாக நீ மாறவேண்டும் என்று சொன்னார். எப்பொழுது? காலம் வரும்வரையில் பொறுமையாக இருக்க வேண்டும். சிலசமயத்தில், நீ ஜடப்பொருளாக மாற வேண்டுமென்று

யோகிகளுக்கு சொல்வார். சில ஏழைகளுக்கும் அதே கருத்து, பொறுமை உள்ள சீடர்களுக்கும் அதே கருத்து, பொறுமை உள்ள அரசனுக்கும் அதே கருத்து, இல்லறத்தானுக்கும் அதே கருத்து, யாராக இருந்தாலும் ஜடப்பொருளாக தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். உணர்வற்ற தன்மைக்கு நீ வர வேண்டும். உணர்வு சிறிது இருக்குமேயானால் உன்னை பேச தூண்டிவிடும். அதன் காரணமாக எடுத்துக்கொண்ட இலட்சியம் தடைபடும். ஆகவே மண்ணைப் போன்று உணர்வற்று இரு என்கிறார் மகான் திருவள்ளுவர்.

**பொறுத்தல் இறப்பினை என்றும்; அதனை**
**மறத்தல் அதனினும் நன்று.**

**– திருக்குறள் – பொறை உடைமை – குறள் எண் 152.**

**பொறுத்தல் இறப்பினை என்றும்** – வரம்பு கடத்தல் என்று சொல்கிறார். பிறத்தல் இறத்தல் என்பது வரம்பு கடந்து என்பதாகும். ஒருவன் வரம்பு கடந்து பிறருக்கு இடையூறு செய்தால் அதை பொறுத்துக் கொள்ள வேண்டும். பொறுப்பதை விட மறப்பது நன்று என்று சொல்கிறார். மற்றவன் செய்த தீங்கு மனதிலே தங்குமேயானால், சில சந்தர்ப்பத்தில் இவனை அறியாமலேயே வெளிப்பட ஆரம்பித்து, வெறுப்புணர்ச்சியை உண்டாக்கும். ஆகவே மற்றவன் செய்த இடையூறை மறக்க வேண்டுமென்று மகான் திருவள்ளுவர் சொல்கிறார்.

**நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று.**

**– திருக்குறள் – செய்ந்நன்றி அறிதல் – குறள் எண் 108.**

**பொறுத்தல் இறப்பினை என்றும்; அதனை**
**மறத்தல் அதனினும் நன்று.**

**– திருக்குறள் – பொறை உடைமை – குறள் எண் 152.**

அதேசமயத்தில் அவன் செய்த தீங்கை பொறுத்துக் கொண்டு மறக்கின்ற மனநிலைக்கு வர வேண்டும்.

**இன்மையுள் இன்மை விருந்தொரால்; வன்மையுள்**
**வன்மை மடவார்ப் பொறை.**

**– திருக்குறள் – பொறை உடைமை – குறள் எண் 153.**

ஒரு கோடீஸ்வரனைப் பார்த்து, இவன் பொல்லாத வறுமை உள்ளவன் என்று மகான் திருவள்ளுவர் சொன்னார். இவன் கோடீஸ்வரனல்லவா, இவனுடைய களஞ்சியத்தில் நூற்றுக்கணக்கான மூட்டை நெல் இருக்கிறதே, இவனைப் பார்த்து வறுமையில் உள்ளவன் என்று எப்படி சொன்னார். இவனுக்கா வறுமை? நூற்றுக்கணக்கான மாடுகளும், களஞ்சியத்தில் நெல் மூட்டைகளும் இருக்கின்றன. எங்கு பார்த்தாலும் நிலபுலங்கள் இருக்கிறது, வீடு வாசல்

இருக்கிறது. இவனைப் பார்த்து மகான் திருவள்ளுவர் வறுமை உள்ளவன் என்று சொல்கிறாரே? இதற்கு என்ன காரணம்? தன்னை நோக்கி வருகின்ற விருந்தினரை உபசரிக்காத காரணத்தினாலே, இவன் வறுமையிலேயே மிக வறுமை உள்ளவன் என்று சொல்கிறார்.

ஒரு சாதாரண குடிசையில் இருப்பவனைப் பார்த்து, இவன் கோடீஸ்வரன் என்று சொல்கிறார், பெரிய செல்வந்தன் என்று சொன்னார். என்ன காரணம்? தன்னை நோக்கி வருகின்ற விருந்தினரை அன்போடு உபசரிக்கின்றான். ஆகவே செல்வம் இல்லாவிட்டாலும் அவன் கோடீஸ்வரன்தான். விருந்தை உபசரிக்கக் கூடிய பண்பு ஒருவனுக்கு இருக்குமேயானால் அவன் மிகுதியாக வசதி உள்ளவன், செல்வம் உள்ளவன். மிகுதியான செல்வம் இருந்தும் விருந்தை உபசரிக்காத ஒரு அறியாமை இருக்குமேயானால், அவன் வறுமையிலே வறுமை உள்ளவன். இங்கே சிறப்பித்து சொல்லும்போது அறியாமை உள்ளவனிடமும் பொறுமை காட்ட வேண்டும் என்பதை **மடவார்ப் பொறை** என்கிறார்.

**சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி**
**துலையல்லார் கண்ணும் கொளல்.**

**– திருக்குறள் – சான்றாண்மை – குறள் எண் 986.**

ஆகவே தகுதியில்லாத மக்கள், அறியாமை உள்ளவனிடம் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

**நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை**
**போற்றி ஒழுகப் படும்.**

**– திருக்குறள் – பொறை உடைமை – குறள் எண் 154.**

தகுதியுள்ளவனாக இருக்க ஆசைப்படுகிறாயா? என்று கேட்டதற்கு ஆமாம் என்றான். அதற்கு நீ பொறுமையாக இருக்க வேண்டும் என்றார்.

பொறையுடைமையை பாதுகாக்க வேண்டுமென்று சொல்லவில்லை. **போற்றி ஒழுகப் படும்** என்று சொல்கிறார். நீ பெருமைக்குரிய மனிதனா? ஆமாம் என்றான். அப்படியானால் நிச்சயமாக பொறுமையுடன் நீ இருக்க வேண்டுமென்று சொன்னார்.

**ஒறுத்தாரை ஒன்றாக வையாரே; வைப்பர்**
**பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.**

**– திருக்குறள் – பொறை உடைமை – குறள் எண் 155.**

**ஒறுத்தாரை ஒன்றாக வையாரே** – சமுதாயத்திலே பொறுத்துக் கொள்ளுகின்ற பண்பு ஒருவனுக்கு இருக்குமேயானால், அந்த பண்புள்ளவன் தங்கமான மனிதன். எவ்வளவு கீழ்த்தரமாக அவனை பேசினாலும் பொறுத்துக்

கொண்டிருக்கிறானே, அவனுக்கு நிகரே கிடையாது. அவனை கடவுள் என்று சொல்லுமளவிற்கு உயர்ந்தவன். இப்படி ஒரு மனிதனை பார்த்ததே இல்லை. எவ்வளவு கேவலமாக பேசினாலும், பொறுத்துக் கொள்கிறான். ஆகவே அவன் தங்கமான மனிதன்.

**பொன்போல் பொதிந்து** – தங்கமானவர் என்று மனதில் வைத்திருக்கிறான்.

**ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்**
**பொன்றும் துணையும் புகழ்.**

**– திருக்குறள் – பொறை உடைமை – குறள் எண் 156.**

ஒருவன் இடையூறு செய்துவிட்டால், உடனே அவனுக்கு இடையூறு செய்ய ஆரம்பிப்பான். அவன் அடித்தான், நான் அடித்தேன் என்பான். இதனால் அந்த பொழுது மட்டும்தான் மகிழ்ச்சி. ஆனால் பொறுத்துக் கொள்கின்றவனுக்கு ஆயுள் முழுவதும் புகழுண்டாகும். அந்தப் புகழ் உலகம் உள்ளவரையில் இருக்கும் என்று சொல்வார், ஆனால் அப்படி நிச்சயம் இருக்க முடியாது. எத்தனையோ மக்கள் ஆயிரக்கணக்கானவர்கள் இந்த உலகத்தில் கோடானகோடி மக்கள் தோன்றப் போகிறார்கள். உயர்ந்த பண்புள்ளவனும் தோன்றுவான், ஞானிகளும் தோன்றுவான், எல்லா மக்களும் தோன்றுவார்கள். ஒவ்வொருவருடைய பெருமைகளையும் பேசிக் கொண்டிருக்க முடியாது.

ஒருவன் பொறுமையைக் காட்டினால் அவனை கோழை என்று நினைக்கக் கூடாது. ஒருவனை அடித்து துன்புறுத்தும்போது, அடிவாங்குபவன் என்னை அடிக்கிறீர்களே, எனக்கே இப்படி வலிக்கிறதே, என்னை அடிக்கும் உங்களுக்கு எப்படி வலிக்கும் என்று அடித்தவனின் காலைப்பிடித்துக் கொண்டு கேட்டானாம். அடித்தவன் தானாகவே தலைகுனிந்தான். இதல்லவா புகழ்.

எடுத்துக் கொண்ட இலட்சியத்தை அடையும் வரை, தன்னை எதிர்ப்பவன் தடையாக இருக்கக் கூடாது என்பதற்காக பொறுமையாக இருக்கிறான். அதனால்தான் அவன் காலைப்பிடித்தானே தவிர, பயந்து கொண்டு காலைப் பிடிக்கவில்லை. அந்த சமயத்தில் தன்னை அடித்தவனை எதிர்த்து அடித்திருந்தால் அது ஒருநாள் இன்பம்தான். ஆனால் உலகம் உள்ளளவும் அந்த பொறுமைக்கு பெருமை உண்டாகும்.

**ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்**
**பொன்றும் துணையும் புகழ்.**

**– திருக்குறள் – பொறை உடைமை – குறள் எண் 156.**

ஆயுள் மட்டுமல்ல, உலகம் உள்ளளவும் அந்த பொறுமைக்கு பெருமை உண்டு.

**திறன்அல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து**
**அறன்அல்ல செய்யாமை நன்று.**

**– திருக்குறள் – பொறை உடைமை – குறள் எண் 157.**

**திறன்அல்ல –** சில பேர் கோபமாக பேசி இடையூறு செய்வான். ஆனால் அந்த கோபத்திலும் அவனுடைய சொற்கள் நயமாக இருக்கும். சுத்த மடையனாக இருக்கிறான் என்று சொல்வானே தவிர, வேறு வார்த்தையை பயன்படுத்தாமல், பண்பை காட்டுவான். அந்த கோபத்திலே பண்பை காட்டக்கூடிய வாய்ப்பு சிலருக்குத்தான் உண்டு.

கோபத்தில் தகுதியில்லாத வார்த்தையை பேசினாலும், **நோநொந்து அறன்அல்ல செய்யாமை நன்று** என்று சொல்கிறார். யோகிகள் அவர்களது கடமையை செய்து கொண்டிருப்பார்கள். அதனுடைய தாத்பரியம், பண்புகள், இயல்பு, பெருமைகளை அறியாமல் சிலபேர் சாடி பேசுவார்கள். நாம் கோபித்துக் கொண்டால், இதயத்தில் எழுகின்ற அந்த உணர்வு, அவனுடைய வாழ்வை பாழ்படுத்திவிடும். ஆகவே யோகிகள் பொறுமையாக இருக்க வேண்டும்.

**நோநொந்து –** ஐயோ நரகம் வந்துவிடுமே என்று அச்சப்படுவான். நமது உள்ளத்தில் எழுகின்ற உணர்வை வெளிப்படுத்திவிட்டால், நம்மை இகழ்ந்து பேசியவனுக்கு நரகம் வந்துவிடுமே என்று எண்ணி யோகிகள் பொறுமையாக இருக்க வேண்டும்.

**நோநொந்து –** வருகின்ற துன்பத்தை ஆராய்ந்து பார்த்து இவன் பொறுமையாக இருப்பான்.

**அறன்அல்ல செய்யாமை நன்று –** அவனுக்கு வருகின்ற துன்பத்தை உணர்ந்தால், நிச்சயமாக இவன் சிறப்பறிவு உள்ளவன் என்று பொருள்படும். யோகிகளுக்குத்தான் இந்த வாய்ப்பு கிடைக்கும்.

**மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்**
**தகுதியான் வென்று விடல்.**

**– திருக்குறள் – பொறை உடைமை – குறள் எண் 158.**

தகுதி என்பதை இங்கே ஆயுதம் என்று சொல்கிறார். யான் என்ற கர்வம் கொண்டு ஒருவன் இடையூறு செய்தால், அதை அப்படியே தாங்கிக் கொண்டு பேசாதிருக்க வேண்டும். சிலபேர் தனக்கு பிடிக்காதவர்கள் வீட்டு வழியே செல்லும் போது, அவரைப் பார்த்து தூ என்று எச்சிலை துப்புவார்கள். வாயிலே எச்சில் இருக்கிறது துப்புகிறான், உன் மேலே துப்பவில்லை அல்லவா நீ பேசாமல் இரு என்று சான்றோர்கள் சொல்வார்கள். இப்படி பேசாமல் போனால், நிச்சயமாக அதை வென்றுவிட்டான். தன்னைப் பார்த்து காரி உமிழ்ந்தவனை, இவன் பொறுமை என்ற ஆயுதத்தை கொண்டு வென்றுவிட்டான். இது சின்ன விஷயமல்ல.

ஒருவன் கடுமையாக பார்த்தாலே கோபம் வரும். ஏளனமாக சிரித்தாலே, காரி உமிழ்ந்தாலே அதைவிட கோபம் வரும். இதை அப்படியே பொறுத்துக் கொள்ள வேண்டுமென்ற பண்பு ஒரு சிலரிடம் இருக்கிறது. அந்தப் பண்பையே வெல்லுகின்ற கருவி என்று சொல்கிறார்.

**ஆற்றுவார் ஆற்றல் பணிதல்; அதுசான்றோர்**
**மாற்றாரை மாற்றும் படை.**

**– திருக்குறள் – சான்றாண்மை – குறள் எண் 985.**

இந்த பண்புகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்போது, ஒருவன் தவறு செய்யும்பொழுது பொறுத்துக் கொள்கின்ற பண்பு, ஞானியர்களுக்குதான் உண்டு. உயர்குடி மக்களுக்கும், பயிற்சி உள்ள மக்களுக்கும் இந்த பண்பு உண்டு.

தினந்தினம் குடித்துவிட்டு வந்து மனைவியை அடிப்பான். அவனுடைய மனைவி பொறுமையாக இருந்தாள். ஆனால் வேறு வழியில்லாமல் பொறுமையாக இருந்தாள்.

வசதியுள்ள வீட்டுப் பெண்ணை ஒருவன் திருமணம் செய்திருப்பான். வேறுவழியில்லை, தன் மனைவியிடம் அடங்கி போவான். ஆனால் மாற்று வழியிருக்கும்போதும் பொறுமையைக் காட்டினால் அது சிறப்பு என்கிறார். வேறு வாய்ப்புகள் வசதிகள் இருந்தும் பொறுமையை காட்டினால் அது பொறுமையின் சிறப்பு என்று சொல்வார்.

பொறுமையைக் கடைப்பிடிப்பவனை துறவி போன்றவன் என்று சொன்னார். துறவி போன்ற தூய்மை உடையவன். துறவி எதையும் விரும்பவில்லை, எதன் மீதும் ஆசையில்லை, ஆகவே அவன் பொறுமையை காட்டுகிறான்.

இல்லறத்தான் தனக்கு வந்தது போதும், இதுவே நமக்கு நியாயம், நமது ஆற்றல், இதுவே நமது சுற்றுப்புற சூழ்நிலை, நமது வல்லமை, நமக்குள்ள அமைப்பு இவ்வளவுதான் என்று இருப்பான். இவன் போதும் என்று நினைத்தாலே நிச்சயமாக இவனுக்கு பொறுமை தானே வரும். யோகிகள் தனக்குள்ளது போதும் என்று இருப்பார். நமக்கு தேவையானதை ஆசான் அகத்தீசர் அருள் செய்வார், ஏன் மனமே தடுமாறுகிறாய் என்று சொல்வார்கள். அதேபோன்று இல்லறத்தானும் ஏன் மனமே குழப்பிக் கொண்டு தெளிவில்லாமல் இருக்கிறாய்? உனக்கு அமைப்பு அவ்வளவுதான் விட்டுவிடு என்பான்.

ஆகவே அந்த நிலையை அடைந்தவன், இந்த நிலையில் ஒரே மாதிரி இருப்பான். ஆசான் அகத்தீசர் ஆசியால் எல்லாம் நடக்கும் என்று இருப்பான். அவனும் எப்படி இருப்பான்? நமக்கு உள்ளது அவ்வளவுதான், ஏன் தடுமாறுகிறாய் என்பான். ஆகவே இரண்டுபேரும் ஒன்று என்று சொல்கிறார்.

**துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்**
**இன்னாச்சொல் நோற்கிற் பவர்.**

**– திருக்குறள் – பொறை உடைமை – குறள் எண் 159.**

**இறந்தார்வாய் இன்னாச்சொல் நோற்கிற் பவர் –** இறந்தவன் என்று சொன்னால், நெறி கடந்தவன் பேச்சை எவன் பொறுத்துக் கொள்கின்றானோ, அவன் துறவிக்கு நிகரானவன் என்று பொருள்படும். நெறி கடந்து பேசினாலும் அதை பொறுத்துக் கொண்டான்.

**இறந்தார்வாய் –** நெறிகடந்தவன் கடுமையாக கொடுஞ்சொற்களை சொன்னாலும், பொறுத்துக் கொள்கின்ற பண்பு, துறவிக்குத்தான் உண்டு. அடுத்தபடியாக மற்றவனுடைய மனநிலையை அறிந்தவனுக்கு உண்டு. துறவியைவிட உயர்ந்தவன் என்று இவனை சொல்கிறார்.

சிலர் அவனை தாக்கி பேசுவான், என்ன காரணம்? ஏன் அவனை இப்படி தாக்கி பேசுகிறான்? முன்ஜென்மத்திலே ஒரு ஞானியை தாக்கி நீ பேசியிருக்கிறாய், அதனால் அவன் உன்னை தாக்கி பேசுகிறான் விடு என்கிறார். அதேபோன்று இல்லறத்தான் என்ன செய்வான்? நமக்கு உள்ள சூழ்நிலைக்கு வயதிற்கு வந்த பெண் இருக்கிறது. இவனை எதிர்த்துப் பேசினால், நம் மீது பகை கொண்டு, நமது பெண் கல்யாணத்திற்கு இவன் தடை செய்வான். அதனால் இந்த பிரச்சனையை பெரிதுபடுத்தாது விட்டுவிடுவான். அப்படியே பொறுமையோடு இருப்பான். அந்தந்த கால சூழ்நிலை வரும்போது, சூழ்நிலைதான் அவனை சரிப்படுத்துமே தவிர, வேறு வழியில்லை.

**உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்**
**இன்னாச்சொல் நோற்பாரின் பின்.**

**– திருக்குறள் – பொறை உடைமை – குறள் எண் 160.**

மகான் திருவள்ளுவர் நெசவு நெய்து கொண்டிருந்தார். அங்கே ஒரு யோகி வந்திருக்கிறார். அவரைப் பார்த்து கைஜாடை காட்டி அமர சொன்னாராம். பிறகு ஒரு இல்லறத்தான் வந்தான். அவனைப் பார்த்து மகான் திருவள்ளுவர் வாங்க உட்காருங்க என்று வரவேற்றார். நாம் பன்னிரண்டு வருடம் உப்பில்லாமல் சாப்பிடுகிறோம், நாம் வரும்போது, தலையை ஆட்டிவிட்டு பேசாமல் இருந்தார். இல்லறத்தான் வந்தவுடன் அவனிடம் இவ்வளவு அன்பு காட்டுகிறாரே என்று அந்த யோகி எண்ணினான்.

இல்லறத்தான் வந்தவுடன் அவனைப் பார்த்து கை கொடுத்து பணிந்தார். யோகியை பார்த்துவிட்டு பேசாமல் இருந்தார். அவனிடம் மட்டும் அன்பு காட்டுகிறாயே? என்ன காரணம்? ஏன் என்னிடம் அன்பு காட்டவில்லை? என்று அந்த யோகி கேட்டார்.

உனக்கு தவ வலிமை இருக்கிறது, யாரேனும் உன்னை இடரினால் உன்னுடைய ஆற்றலை உடனே நீ வெளிப்படுத்துகிறாய், ஆனால் அவன் அந்த அளவிற்கு இல்லாதவன், இருந்தாலும் பொறுத்துக் கொள்கிறான் அல்லவா, அவனிடம் ஆற்றல் இருந்தாலும் வெளிப்படுத்தாது அடக்கத்தோடு இருக்கிறான். அவன் எடுத்துக் கொண்ட இலட்சியத்தை அடையும் வரையில் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று அவன் இருக்கிறான். நீ விரைவாக அடைந்த அந்த லாபத்தை, தவ வலிமையை பயன்படுத்துகிறாய். ஆகவே உன்னைவிட அவன்தான் முதன்மையானவன். இங்கே இல்லறத்தான் உயர்ந்தவன் என்கிறார்.

இவன் உப்பில்லா உணவை உண்டான், அதுவும் ஒரு நேர உணவைதான் உண்டான், உடம்பை வருத்தினான். ஆனாலும் இது ஒரு வகையான சிறப்பறிவே தவிர, மற்றவன் இகழ்ந்து பேசியதை பொறுத்துக் கொள்ளும் பண்பு இவனுக்கு இல்லை. ஆகவே யோகியை விட, இல்லறத்தான்தான் உயர்ந்தவன்.

**உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்**
**இன்னாச்சொல் நோற்பாரின் பின்.**

**– திருக்குறள் – பொறை உடைமை – குறள் எண் 160.**

**நோற்பாரின் பின்** என்று சொன்னார். காரணம், இவன் எடுத்துக் கொண்ட இலட்சியத்தை அடையும் வரையில் அடக்கமாக இருக்க இவனுக்கு தெரியவில்லை. ஆகவே இவனைவிட இல்லறத்தான் உயர்ந்தவன். தான் மேற்கொண்ட இல்லறத்தை அவன் சிறப்பாக நடத்தி முடிக்க வேண்டும். யார் அவனை இகழ்ந்து பேசினாலும், அப்படி பேசியவனுக்கு இடையூறு செய்யாமலும், எதிர்த்து பேசாமலும் அடக்கமாக இருக்க வேண்டும். ஆகவே அவன் எடுத்துக் கொண்ட இலட்சியத்தை சிறப்பாக முடிப்பான்.

ஆனால் யோகியோ எடுத்துக்கொண்ட இலட்சியத்தை சிறப்பாக முடிக்க மாட்டான். ஆகவே யோகியை விட, இல்லறத்தான் உயர்ந்தவன். இங்கே பன்னிரண்டு வருடம் உப்பில்லா உணவு சாப்பிட்டவனுக்கு பாராட்டு இல்லை, சாதாரண இல்லறத்தான் பாராட்டை பெறுகிறான் என்றால், பொறுமையை இல்லறத்தான் கடைப்பிடித்தான், அவனுடைய சக்தியை பயன்படுத்தவில்லை. ஆனால் யோகி தனது பொறுமையை இழந்து, தனது சக்தியை பயன்படுத்திவிட்டான். ஆகவே யோகியை விட இல்லறத்தான் உயர்ந்தவன்.

ஆகவே பல்வேறு பிரச்சனைகள் வாழ்க்கையில் வரும்போது, பொறுமையை கடைப்பிடிக்க முடியாது. இல்லறத்தானுக்கு வறுமையினால் நாளுக்குநாள் பல்வேறு பிரச்சனைகள் வந்து கொண்டே இருக்கும். பிரச்சனைகள் எந்த காலத்திலும் இருக்கத்தான் செய்யும். ஆனால் இவ்வளவு பிரச்சனைகளும் சமுதாயத்தில் இருக்கிறது. ஆனால் அமைதியாக இருக்கிறான். நல்ல

மனைவி, நல்ல பிள்ளைகள், நல்ல பண்புள்ள தாய்தந்தையர்கள், திடமான உடம்பு, நிறைய பொருள், நல்ல வீடு, நல்ல படுக்கை, விருப்பமான உணவு என எல்லாம் இருக்கிறது. எதை சாப்பிட்டாலும் ஜீரணமாகி, என்னென்ன உணவு சாப்பிட வேண்டுமென்று விரும்புகின்றானோ அந்த உணவெல்லாம் அவனுக்கு கிடைக்கும்.

ஆனால் ஒரு சிலர் ஏதேதோ ஆசைப்படுகிறான், அடைய முடியவில்லை. தன் தகுதிக்கு உட்பட்டதை நினைத்தாலும் அதை அடைய முடியவில்லை. தன்னுடைய தகுதிக்கு மீறியது கைகூடாதிருப்பது இயல்பே. தகுதிக்கு உட்பட்டதை நினைக்கிறான், கைகூடவில்லை, தட்டுத் தடுமாறுகிறான். இவ்வளவு பலகீனமான சுற்றுப்புற சூழ்நிலை, இவனுக்கு சரியில்லையென்றாலும், மனிதவர்க்கத்தில் சிலர் அமைதியாக இருக்கிறான் என்றால், அவன் தவம் செய்திருக்க வேண்டும். நாங்கள் சொல்வதெல்லாம் கற்பனையல்ல.

புண்ணியம் செய்தவனுக்கு, நோயில்லாத மனைவி, பண்புள்ள பிள்ளைகள், நல்ல சுற்றுப்புற சூழ்நிலை, விருப்பமானதெல்லாம் கைகூடுகிறது, அமைதியாக வாழ்கிறான். அவன் நிச்சயமாக புண்ணியம் செய்திருக்கிறான். அவன் தவமும் தருமமும் செய்ததால் அவனுக்கு அந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதை நாமும் பெற வேண்டும்.

ஆகவே பிரச்சனை உள்ள அன்பர்கள், தினந்தினமும் காலை எழும்போதே, நான் அமைதியாக வாழ ஆசைப்படுகின்றேன், என்னுடைய தகுதிக்கு உட்பட்டதை மட்டும் விரும்ப ஆசைப்படுகின்றேன். என்னுடைய தகுதி, சுற்றுப்புற சூழ்நிலை இதற்கு உட்பட்ட ஒன்றை மட்டும் நான் விரும்ப வேண்டும். தகுதிக்கு மீறிய ஒன்றை விரும்பி, கைகூடாவிட்டால் நான் சோர்வடையக் கூடாது.

ஆகவே என்னுடைய தகுதிக்கு உட்பட்டதை விரும்பவும், அது கைகூடவும், நான் அமைதியாக இருக்க ஆசைப்படுகின்றேன். நல்ல நண்பர்கள் கிடைக்க வேண்டும். பகை உணர்வுள்ள அன்பர்கள் என்னிடம் வராமலிருக்க வேண்டும். ஒத்தக் கருத்துள்ள நண்பர்கள் அமைய வேண்டும். ஒத்தக் கருத்துள்ள பிள்ளைகள் அமைய வேண்டும். என்னை சார்ந்தவர்களும் ஒத்தக் கருத்துள்ளவர்களாக இருக்க வேண்டும். நான் அமைதியாக வாழ ஆசைப்படுகின்றேன். அதற்கு தங்களுடைய திருவடியைப் பற்றி பூஜை செய்து, தெளிவான அறிவும், நல்ல மனமும், சாந்தமும் பெற அருள் செய்ய வேண்டுமென்று தினம்தினம் கேட்டாலன்றி பொறுமையை கடைப்பிடிக்க முடியாது. ஆகவே அன்பர்கள் இதை பின்பற்ற வேண்டும். நானும் பின்பற்றுகிறேன், உங்களையும் பின்பற்ற சொல்கிறேன். நாங்கள் திருக்குறளில் பொறையுடைமை அதிகாரத்திற்கு விளக்கத்தை விரைவாக சொல்லியிருக்கிறோம்.

இதுநேரம் வரையில் அமைதியாக, பொறுமையாக இருந்து நாங்கள் சொன்ன கருத்துகளை கேட்டீர்கள். பொறையுடைமை என்றால் பொறுமை என்று அர்த்தம். மற்ற கதை, காவியங்களை கேட்டு படித்து ரசிக்கலாம். ஆனால் திருக்குறள் போன்ற நூல்களில் உள்ள கருத்துகளை பேசும்போது, கேட்பவர்கள் பொறுமையாக இருந்து கேட்க வேண்டும். கருத்தாழம் உள்ள ஒன்று. ஆகவே இதையெல்லாம் பொறுமையாக நீங்கள் கேட்டுக் கொண்டிருந்தீர்கள். மகான் திருவள்ளுவர் அருளிய பொறையுடைமை அதிகாரத்தின் கருத்துகளை பேசுவதற்கும், கேட்டுக் கொண்டிருந்த நீங்கள் பொறுமையாக இருந்ததற்கும் ஒப்பிட்டு பார்க்கும்போது, அளவிலா மகிழ்ச்சி அடைகிறேன். இதுநேரம் வரை அமைதியாக இருந்து என்னுடைய பேச்சை கேட்ட நீங்களெல்லாம், நான் சொன்ன கருத்துகளை பின்பற்றி மேன்மையடைய வேண்டுமென்று சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

–சுபம்–

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

# முருகன் திருவடி வாழ்க

முருகப்பெருமான் தங்கி அருள் செய்யும் இடமே
துறையூர் ஓங்காரக்குடில் ஆகும்.

**நமது குலதெய்வம் முருகப்பெருமானே**

**எந்தை நந்தனார் இணையடி போற்றிட**
**சிந்தையும் தெளிய சிவமது ஆவாரே!**

**திருமூலர் திருவடியை தினமும் போற்றிட**
**கருமூலம் கடக்க காட்டுவார் உண்மையை!**

**– மகான் ஆறுமுக அரங்கமகாதேசிகர்.**

# அணுவினுள் அணுவைக்கண்ட ஔவையார் அருளிய விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயா  பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாகஇனி தெனக்கு அருளிப்
புரியட்ட காயம் புலப்பட  எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

................

ஞானிகள் திருஉருவப்படங்கள்,
ஆசான் அருளிய நூல்கள், தினசரி, மாத நாட்காட்டிகள்,
ஆசான் அருளுரைகள் அடங்கிய ஒலி ஒளி குறுந்தகடுகள் CD
மற்றும் ஞானத்திருவடி நூல்
கிடைக்கப் பெறாதவர்களும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்,**
ஸ்ரீஅகத்தியர் சன்மார்க்க சங்கம்,
ஓங்காரக்குடில்,
துறையூர் – 621 010.
✆ 04327–255184, செல்: 90950 33311
மின்னஞ்சல் : kudilbooks@gmail.com

அகத்தியர் துணை



மகான் அகத்தியர்



குருநாதர்



ஓங்காரக்குடிலாசான், முருகப்பெருமானின் கல்கி அவதாரம், தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்களுடைய சொற்பொழிவுகளை ஒலி, ஒளி (Audio Video) வடிவமாக கேட்கவும் பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் (Download) செய்யவும்,

# www.agathiar.org

என்ற இணைய தளத்திற்கு செல்லவும். மேலும் நித்ய சுவடிகள் பதிவிறக்கம் செய்து படித்துக் கொள்ளலாம்.

குருவருள்வேண்டி . . .

மரு. இரா.விஜயகுமார் – இரா.மாதவன்

## அன்னை மருத்துவமனை,

## துறையூர்.

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அருளுகின்ற மாத இதழ்

# ஞானத்திருவடி

கடவுளால் இயற்றப்பட்ட நூல். உலக மக்கள் துன்பமில்லாமல் வாழவும், ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளவும், ஞானிகள் வழிமுறைகளை தொகுத்து கொடுத்துள்ளார்கள். எனவே இந்த நூலை படித்து மற்றவர்களுக்கு வாங்கி கொடுப்பது மிகப்பெரிய புண்ணியம் ஆகும். ஞானத்திருவடி நூலிற்கு சந்தா செலுத்துதல், சந்தாவை புதுப்பித்தல் மற்றும் ஞானத்திருவடி நூலை வாங்கி கொடுப்பதற்கும் உங்கள் அருகாமையில் உள்ளவர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| 1. | சரவணன், மண்ணச்சநல்லூர், திருச்சி | 84289 05393 |
| 2. | கோவை – | |
| | பிரபு, ஒண்டிபுதூர் | 90035 67548 |
| | கிருஷ்ணமூர்த்தி, இடையர்வீதி | 98947 49339 |
| | தெய்வசேனா, வடவள்ளி | 77088 93843 |
| | ஸ்ரீதர், காட்டூர் | 94872 24035 |
| | கோவிந்தராஜ், துரை டிரைவிங், ஸ்கூல், சூலூர் | 98651 94194 |
| 3. | சென்னை – | |
| | ரெங்கநாதன், வடபழனி | 96770 17170 |
| | ஜெயராஜ், அம்பத்தூர் | 94441 75629 |
| | முருகவேல், அம்பத்தூர் | 95660 54957 |
| | ராமச்சந்திரன், மேடவாக்கம் | 87544 40544 |
| | ரகுபதி, திருவொற்றியூர் | 99622 32314 |
| | சௌந்தரராஜன், மீஞ்சூர் | 98406 24169 |
| 4. | மோகன் கென்னடி, விருதுநகர், மதுரை | 98421 01357 |
| 5. | கோபாலகிருஷ்ணன், மணப்பாறை | 80121 63639 |
| 6. | பழனிச்சாமி, கரூர் | 90955 16455 |
| 7. | பாஸ்கர், தூத்துக்குடி | 98650 84856 |
| 8. | சசிக்குமார், மார்த்தாண்டம், நாகர்கோவில் | 94893 93303 |
| 9. | சரவணன், திருநெல்வேலி | 93677 55008 |
| 10. | கோபிநாத், சேலம் | 78713 99100 |
| 11. | பாண்டுரங்கன், திருவண்ணாமலை | 95004 74192 |
| 12. | பாபு, தஞ்சாவூர் | 97891 66458 |
| 13. | சிவசங்கரன், ராமநாதபுரம் | 98426 23117 |
| 14. | யூவி, நாமக்கல் | 99651 29647 |
| 15. | பிரேம், ஈரோடு | 76674 37673 |
| 16. | செல்லத்துரை, சித்தோடு | 90957 45489 |
| 17. | ராஜேந்திரன், வேதாரண்யம் | 94885 32616 |

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## 85வது அவதார விழா மற்றும் மார்கழி பௌர்ணமி விழா

நாள் : **விகாரி ஆண்டு, மார்கழி மாதம் 25ஆம் தேதி,**
**10.01.2020 - வெள்ளி காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** நிகழ்ச்சி நிரல் **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை
ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :
**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## தைப்பூசம் மற்றும் பௌர்ணமி விழா

நாள் : **விகாரி ஆண்டு, தை மாதம் 25ஆம் தேதி,**
**08.02.2020 - சனிக்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** நிகழ்ச்சி நிரல் **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை
ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :
**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

## ஓங்காரக்குடில் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (தமிழ்) | ரூ. 5 |
| 2. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (ஆங்கிலம்) | ரூ. 20 |
| 3. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (சமஸ்கிருதம்) | ரூ. 20 |
| 4. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மலையாளம்) | ரூ. 15 |
| 5. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (கன்னடம்) | ரூ. 20 |
| 6. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (குஜராத்தி) | ரூ. 20 |
| 7. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மராட்டி) | ரூ. 20 |
| 8. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பெங்காளி) | ரூ. 20 |
| 9. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பஞ்சாபி) | ரூ. 20 |
| 10. | ஞானிகள் அருளிய தினசரி பாராயண நூல் | ரூ. 75 |
| 11. | அனுபவ விளக்கப் பத்திரிக்கைகள் | ரூ. 45 |
| 12. | மனுமுறைகண்ட வாசகம் | ரூ. 50 |
| 13. | மனுமுறைகண்ட வாசகம் (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 14. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை | ரூ. 40 |
| 15. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 40 |
| 16. | சுகமான வாசியே அகத்தீசராகும் | ரூ. 25 |
| 17. | திருக்குறள் ஞானஅமுது – குருநாதர் அருளுரை | ரூ. 60 |
| 18. | தன்னை அறியும் அறிவே தகைமையாகும் | ரூ. 15 |
| 19. | ஜீவகாருண்ய ஒழுக்கம் | ரூ. 20 |
| 20. | ஜீவகாருண்ய ஒழுக்கம் (ஆங்கிலம்) | ரூ. 30 |
| 21. | தமிழைக் கற்றால் வரும் நன்மைகள் | ரூ. 40 |
| 22. | ஞானத்திருவடி ஆண்டு மலர் தொகுப்பு | ரூ. 150 |
| 23. | சிவஞானபோதம் – குருநாதர் அருளுரை | ரூ. 30 |
| 24. | ஆத்திசூடி – விளக்கவுரை | ரூ. 50 |
| 25. | ஆத்திசூடி – விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 26. | சித்தர்களின் பாடல்களுக்கு அரங்கரின் அருளுரைகள் | ரூ. 70 |
| 27. | நித்திய ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 28. | 131 சித்தர்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |

| | | |
|---|---|---|
| 29. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 150 |
| 30. | 131 சித்தர்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 31. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் | ரூ. 180 |
| 32. | குருநாதர் அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவு<br>ஆடியோ, வீடியோ டிவிடி<br>புனித ஞான அகத்தீசனின் பொதிகை கீதம் – ஆடியோ சிடி<br>ஞானிகள் அருளிய ஞானிகள் போற்றி, அரங்கர் சரணம், அரங்கர் போற்றி, அரங்கர் புகழ்மாலை ஆடியோ சிடி<br>சித்தர் போற்றித் தொகுப்பு<br>அகத்தீசன் தத்துவ புகழுரை<br>ஆசான் பாடல்கள் ஆடியோ சிடி.<br>சித்தர் பாடல்கள், கொடி வணக்கம்,<br>மகான் கருவூரார் புகழ் வெண்பா, மகான் கஞ்சமலைச் சித்தர் புகழ் வெண்பா ஞானக்குறள் | ரூ. 10 |
| 33. | ஓங்காரக்குடிலின் ஆவணப்படம் | ரூ. 25 |
| 34. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 1) | ரூ. 130 |
| 35. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 2) | ரூ. 200 |
| 36. | ஞானிகள் திருஉருவப்படங்கள் | |

# அருளுரை

| | | |
|---|---|---|
| 1. | கீர்த்தித் திருஅகவல் | ரூ.15 |
| 2. | ஞானிகள் பற்றிய அனுபவ விளக்கம் | ரூ.15 |
| 3. | மகான் இராமதேவர் அருளிய யோகப்பயிற்சி பாகம்–2 | ரூ.15 |
| 4. | இருமை அறிந்தவர் பெருமை | ரூ.15 |
| 5. | ஞானத்திற்கு தடை சந்தேகமே | ரூ.15 |
| 6. | மோன நிலையே ஞானநிலை | ரூ.15 |
| 7. | அருணகிரிநாதர் புகழ்மாலை | ரூ.15 |
| 8. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 1) | ரூ.15 |
| 9. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 2) | ரூ.15 |
| 10. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 3) | ரூ.15 |
| 11. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 4) | ரூ.15 |
| 12. | பணிவே செம்மையான வாழ்வு | ரூ.15 |
| 13. | நோயில்லா வாழ்வு வாழ வேண்டுமா | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 14. | ஒன்றே குலம் ஒருவனே தேவன் | ரூ.15 |
| 15. | சோம்பல் ஆகாது – பாகம் 1 | ரூ.15 |
| 16. | நட்பே நன்மை தரும் | ரூ.15 |
| 17. | நன்றி மறவாதே | ரூ.15 |
| 18. | உயிருக்கு மருத்துவம் | ரூ.15 |
| 19. | விருந்தே வேள்வியாகும் | ரூ.15 |
| 20. | பூதாதி இலயம் | ரூ.15 |
| 21. | பட்டினத்தாரின் யோகமும் ஞானமும் | ரூ.15 |
| 22. | குருபக்தியே குணப்பண்பு தரும் | ரூ.15 |
| 23. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –1) | ரூ.15 |
| 24. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –2) | ரூ.15 |
| 25. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 1) | ரூ.15 |
| 26. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 2) | ரூ.15 |
| 27. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 3) | ரூ.15 |
| 28. | ஞானிகள் பூஜையே தவமாகும் | ரூ.15 |
| 29. | குருவருளே தவமாகும் | ரூ.15 |
| 30. | முருகன் ஆசிபெற உபாயம் – 3 | ரூ.15 |
| 31. | முருகன் ஆசிபெற உபாயம் – 4 | ரூ.15 |
| 32. | பூஜை | ரூ.15 |
| 33. | தவம் | ரூ.15 |
| 34. | அருட்பெருஞ்ஜோதியை அடையும் முறை | ரூ.15 |
| 35. | விதியை வெல்லும் பக்தி | ரூ.15 |
| 36. | தினசரி பாராயண நூல் | ரூ.15 |
| 37. | எமபயம் நீங்க ஓர் உபாயம் | ரூ.15 |
| 38. | குடமுழுக்கு விழா | ரூ.15 |
| 39. | பௌர்ணமி நோன்பு | ரூ.15 |
| 40. | புறபூஜையும் அகபூஜையும் | ரூ.15 |
| 41. | பூஜை முறையும் வாழ்க்கையும் | ரூ.15 |
| 42. | சுப்பிரமணியர் கடவுளானது எப்படி | ரூ.15 |
| 43. | தலைவன் திருவடியே துணை | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 44. | தயவே சித்தி தரும் | ரூ.15 |
| 45. | திருமந்திர உபதேசம் | ரூ.15 |
| 46. | ஆன்மீக அரசியல் | ரூ.15 |
| 47. | தானமும் தவமும் | ரூ.15 |
| 48. | குருசீடர் நெறிமுறை | ரூ.15 |
| 49. | இல்லறத்தார்க்கு ஓர் உபதேசம் | ரூ.15 |
| 50. | சைவமே ஜென்மத்தைக் கடைத்தேற்றும் | ரூ.15 |
| 51. | வாசி வசப்படல் | ரூ.15 |
| 52. | உண்மை ஆன்மீகம் என்றால் என்ன? | ரூ.15 |
| 53. | எது ஆன்மீகம் | ரூ.15 |
| 54. | விநாயகர் அகவல் | ரூ.15 |
| 55. | பிரபஞ்ச இயக்கம் | ரூ.15 |
| 56. | இருள்சேர் இருவினையும் சேரா இறைவனே வள்ளுவப்பெருமான் | ரூ.15 |
| 57. | தன்னை அறியும் முறை | ரூ.15 |
| 58. | நமசிவாயம் | ரூ.15 |
| 59. | மோட்சகதி | ரூ.15 |
| 60. | திருக்குறளில் குற்றங்கடிதல் | ரூ.15 |
| 61. | பூரணம் எனும் யோகரகசியம் | ரூ.15 |
| 62. | சிவஞானபோதம் 12வது சூத்திர விளக்கம் | ரூ.15 |
| 63. | பஞ்சபூத விளக்கம் | ரூ.15 |
| 64. | சித்த தத்துவமும் பொருளாதாரமும் | ரூ.15 |
| 65. | ஆலய வழிபாடு | ரூ.15 |
| 66. | சமூக சான்றோரும் ஆன்மீக சான்றோரும் | ரூ.15 |
| 67. | சன்மார்க்கத்தில் சித்தாந்தம் | ரூ.15 |
| 68. | சொர்க்க வாசல் | ரூ.15 |
| 69. | சும்மா இரு என்னும் இரகசியம் | ரூ.15 |
| 70. | காயமே இது பொய்யடா | ரூ.15 |

**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்**

**ஓங்காரக்குடில், துறையூர்.**

செல் : 90956 33344

ஓங்காரக்குடில் வெளியீடுகளைப் பெற

# மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்

ஓங்காரக்குடில், துறையூர் - 621010, திருச்சி மாவட்டம்.
செல் - 90956 33344 kudilbooks@gmail.com

எங்களது வெளியீடுகளைப் பெற...

தங்களின் முழு முகவரி மற்றும் தங்களின் செல் போன் எண் தெளிவாக எழுதி புத்தகத்திற்கு உண்டான தொகையை கீழ்க்கண்ட முறைகளில் அனுப்பலாம். (கூரியர் செலவிற்கும் சேர்த்து அனுப்பவும்)

Cheque - காசோலை
DD - வரைவோலை
MO - பணவிடை

....................................

Cheque, DD எடுக்க வேண்டிய பெயர் -

**MAHAN PATHANJALIYAR BOOK STALL,**
**Payable at “Thuraiyur” or “Tiruchirapalli”**

ஓங்காரக்குடில் வெளியீடுகளை பெற கீழ்க்கண்ட முறையில் பணம் அனுப்பலாம்.

Amount Transfer செய்ய வேண்டிய விபரம் -

| | | |
|---|---|---|
| **NAME** | : | **MAHAN PATHANJALIYAR BOOK STALL** |
| **BANK NAME** | : | **Karur Vysya Bank (KVB)** |
| **ACCOUNT NO** | : | **1646135000003720** |
| **IFSC CODE** | : | **KVBL0001646** |
| **BRANCH** | : | **THURAIYUR** |

**இணையம் மூலமாக ஞானத்திருவடி சந்தா செலுத்தவும் மற்றும் புதுப்பிக்கவும் புதிய வசதி**

www.agathiar.in என்ற இணையத்தில் சென்று தங்களுடைய பெயர் மற்றும் முகவரி, அலைபேசி எண் பதிவு செய்து, New User Name and Password கொடுத்து Register செய்து சந்தா செலுத்தினால் மாதந்தோறும் ஞானத்திருவடி மாத இதழ் தங்களது இல்லத்திற்கு தபால்நிலையம் மூலம் அனுப்பப்படும்.

**Payment Options : Net Bank, Debit (or) Credit Card, Paytm**

தொடர்புக்கு :

செல் : **96882 78666, trustkudil@gmail.com**

முருகப்பெருமான் துணை

## நன்கொடை வழங்க...

### அன்னதானம் செய்தால் துன்பங்கள் விலகும்.

கடந்த 43 ஆண்டுகளாக 15 கோடி மக்களுக்கு மேலாக அன்னதானம் செய்து தன் அறப்பணியினை சிறப்புற தொடர்ந்து வருகிறது நமது ஓங்காரக்குடில். இந்த அறப்பணிகளில் நீங்களும் பங்கேற்க வேண்டுமா.

பிரச்சனைகள் தீரவும், தங்களின் பிறந்தநாள், திருமணநாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் அல்லது வியாபாரம் தொடங்கிய நாள் மற்றும் பண்டிகை நாட்களிலும் அன்னதானம் செய்ய விரும்புவோர் DD, Cheque, M.O. மூலம் தங்களின் அருட்கொடையினை வழங்கலாம்.

தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின் படி வருமானவரி விலக்கு உண்டு.

**DD, Cheque, M.O. எடுக்க வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
Payable at Thuraiyur or Trichy.

**Account Details :**

| | | |
|---|---|---|
| A/C Name | : | SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST |
| A/C NO | : | 911010045586268 |
| Bank | : | Axis Bank |
| Branch | : | Thuraiyur.621010 |
| IFS Code | : | UTIB0001272 |

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
113, Extension, Thuraiyur - 621010, Trichy (Dt),
Tamilnadu, India. Ph - 04327 255184. www.agathiar.in

**www.agathiar.in**

என்ற இணைய தளத்தில் உங்கள் பெயரையும், கடவுச்சொல்லையும் பதிந்தபிறகு நன்கொடை செலுத்தி தாங்களும் அன்னதானத்தில் பங்கேற்று புண்ணியத்தை பெறலாம்.

தாங்கள் அனுப்பிய தொகைக்கான இரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

இரசீது கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்புக்கு :

96882 78666, 91503 75562. trustkudil@gmail.com

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

**தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிகரின் அமுத மொழிகள்...**

1. முருகா என்றால் மும்மலக் குற்றங்கள் நீங்கும்.
2. முருகா என்றால் செல்வநிலை பெருகும்.
3. முருகா என்றால் நல்லறிவைப் பெறலாம்.
4. முருகா என்றால் வறுமை, நோய்நொடிகள் நீங்கும்.
5. முருகா என்றால் ஞானவாழ்வு கைகூடும்.
6. முருகா என்றால் மரணமில்லாப் பெருவாழ்வைப் பெறலாம்.

**உயிர் இரக்கமே இறைவழிபாடு....**

**சென்னையில் அப்பார்ட்மெண்ட் மற்றும் தனி வீடு, வீட்டு மனைகள் வாங்க விற்க அணுகவும்.**

குருவருள் வேண்டி

**ம. அருள் பிரகாசம்**

**Srilekha Homes**
Gift to your dream

Plot No: 41, 2nd Floor, V.G.P. BABU NAGAR,
MEDAVAKKAM, CHENNAI - 100

Cell : 98841 27766 , 94449 88877

"சிவாய ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம"

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. —குறள் 226.


# சுந்தரானந்தர் எலக்ட்ரிகல்ஸ்

54–தெற்கு சிவன் கோயில் தெரு, வடபழனி,

சென்னை – 600 026.

✆ 044–24720499, 23721160.

# "அன்னதானம் செய்தால் துன்பங்கள் தீரும்"

குருவருள் வேண்டி . . .

# கணேஷ் ஹார்டுவேர்ஸ் & அலுமினியம்,

19/30, பிள்ளையார் கோவில் தெரு, வடபழனி,

சென்னை – 600 026.

Cell : 98400 – 20828.

✆ 044 – 23651284, 23652568.

## அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல்

பூரண வடிவாய்ப் பொங்கிமேல் ததும்பி
ஆரண முடியுடன் ஆகம முடியும்
கடந்தென தறிவாம் கனமேற் சபைநடு
நடந்திகழ் கின்ற மெய்ஞ்ஞான ஆரமுதே
சத்திய அமுதே தனித்திரு அமுதே
நித்திய அமுதே நிறைசிவ அமுதே
சச்சி தானந்தத் தனி முதல் அமுதே
மெய்ச்சிதா காச விளைவருள் அமுதே
ஆனந்த அமுதே அருளொளி அமுதே
தானந்தம் இல்லாத் தத்துவ அமுதே

## ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

குருவருள் வேண்டி . . .

**ANU BUILDERS (INDIA) Pvt. Ltd.**

**Builders & Estates**

Plot No.37, 2nd Main Road,
V.G.P. Babu Nagar, Medavakkam,
Chennai - 600 100.
Phone: 2277 0495,
E-mail : anubuilders@yahoo.com
Website : www.anubuilders.in

# கவனகர் முழக்கம்

மாத இதழ் – ரூ. 25/–

கவனகரின்

- ஆழமான ஆன்மீக விளக்கங்கள்
- அறிவுபூர்வமான சிந்தனையைத் தூண்டும் கருத்து மலர்கள்.
- விந்தையான பதில்கள் மற்றும் அனைத்துச் சிறப்பம்சங்களும் நிறைந்த மாத இதழ்.

**தமிழர்களின் வாழ்க்கைப் பாதையை வெற்றிப்பாதையாக மாற்ற வழிகாட்டும் இதழ் இப்பொழுது புதிய வடிவமைப்புடன் வெளிவருகிறது**

# கவனகர் முழக்கம்

**ஆசிரியர் :-**

உலகத் தமிழர்களில் ஓர் அதிசய மனிதர், பல்கலை வித்தகர், பதினாறு கவனகர், நினைவு கலைச்செம்மல், மனிதகணிணி

**திருக்குறள்**

# இராம.கனகசுப்புரத்தினம்

மேலும் விபரங்களுக்கு . . .

1/8, மனோஜ் நகர், சாந்தி கியர்ஸ் பவுண்டரி சாலை, கண்ணம்பாளையம், சூலூர், கோவை–641 402. செல் : 94440 55166

மற்றும்

**A.செந்தில்குமார்**

4/248, Maxworth Nagar, சுண்ணாம்பு கொளத்தூர், கோவிலம்பாக்கம், சென்னை–117. ✆ 98414 64388.

மெகா டிவியில் தினமும் காலை 7.30 மணிக்கு கவனகர் அய்யா அவர்களின் வெற்றி நிச்சயம் நிகழ்ச்சி பார்த்து பயன்பெறுங்கள்

அகத்தியர் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்,

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

அவர்கள் தலைமையில்

# ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளையின்

## நித்திய செயல்பாடுகள்

| | |
|---|---|
| காலை 6.00 | முருகப்பெருமானின் சரவண ஜோதி வழிபாடு<br>ஞானியர் அருளிய நூல்கள் பாராயணம்<br>தியானம் (நாமஜெபம்) |
| காலை 7.30 | பெருமாள்மலை அடிவாரத்தில் அன்னதானம். |
| காலை 8.00 | ஒங்காரக்குடிலில் அன்னதானம் |
| மதியம் 1.00 | ஒங்காரக்குடிலில் அன்னதானம் |
| **மதியம் 3.00** | முருகப்பெருமானின் கல்கி அவதாரம்<br>**ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் தரிசனம்** |
| மாலை 5.00 | கிராம அன்னதானம் |
| மாலை 6.00 | அருட்ஜோதி வழிபாடு – தியானம் (நாமஜெபம்)<br>ஆசான் அகத்தீசர் வழிபாடு |

குறிப்பு: பிரதி வியாழக்கிழமை தோறும் காலை 9.30 மணியளவில் ஞானியர்கள் சிறப்பு பூஜையும், குருநாதர் அவர்களின் தரிசனமும் நடைபெறும்.


ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளைக்காக வெளியிடுபவர்

S.செந்தில்குமார், நிர்வாக அறங்காவலர்,

113–நகர் விரிவாக்கம், துறையூர்–621 010, திருச்சி மாவட்டம்.

ஆசிரியர் – இரா.மாதவன்.

அச்சிட்டோர் :

இராம.தொல்காப்பியன்,

வாஞ்சி மறுதோன்றி அச்சகம், கூட்டுறவு நகர், துறையூர்.

# ஞானத்திருவடி - மாத இதழ்

## சந்தாப் படிவம்

☐ 1 வருடச் சந்தா ரூ.120/–     ☐ 3 வருடச் சந்தா ரூ.350/–

திரு/திருமதி. : ____________________

முகவரி : ____________________

____________________

ஊர் : ____________________ பின்கோடு ____________

வட்டம் : ____________________ மாவட்டம் ____________

தொலைபேசி : ____________ (கைபேசி) ____________

சந்தா செலுத்தும் முறை

☐ CHEQUE காசோலை ☐ DD வரைவோலை ☐ MO–பணவிடை

☆ வரைவோலையை Sri Agathiar Sanmaarga Charitable Trust என்ற பெயரில் எடுக்கவும்.

☆ வரைவோலையை payable at Trichy (or) Thuraiyur என்று எடுக்கவும்.

☆ சந்தா அனுப்பும்போது கவரில் பணம் வைத்து அனுப்ப வேண்டாம். பணம் தவறினால் நிர்வாகம் பொறுப்பன்று.

☆ எங்களுக்கு தாங்கள் அனுப்பிய சந்தா கிடைத்த மாதத்திற்கு அடுத்த மாதம் 1–ம் தேதி முதல் மாதஇதழ் தங்களுக்கு அனுப்பப்படும்.

☆ தங்களின் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

நாள் :

செலுத்துபவர் கையொப்பம்

படிவத்தை பூர்த்தி செய்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**ஞானத்திருவடி - மாத இதழ்**

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை**

ஓங்காரக்குடில், 113–நகர்விரிவாக்கம், துறையூர் – 621 010. திருச்சி மாவட்டம்.

ஓங்காரக்குடில் அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

ரசீது எண் : ............ தேதி : ............ ரூபாய் : ............

சந்தாதாரர் முகவரி மாற்றம் இருப்பின் கடிதம் மூலம் தெரிவிக்கவும்